ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத அநந்தார்ய மஹா குரவே நம:

திருமலை அநந்தாழ்வார்

வைபவம்



ஸர்வகந்த இதிக்யாத: ச்ருத்யந்தே வேங்க்டேச்வர: |
யத் ஸமர்ப்பிதமால் யோகை: அநந்தார்யாய மங்களம்.

ஸ்ரீ அநந்தாழ்வார்

925வது

திருவவதார நிறைவு மலர்

acharya.org

ஸ்ரீ

ஸ்ரீ வேங்கடேச பரப்ரம்மணே நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதநந்தார்ய மஹாகுரவே நம:

ஸ்ரீ அநந்தாழ்வார் வைபவம்

அநந்தாழ்வார்

925வது திருநக்ஷத்திர நிறைவு மலர்

(பிங்கள வருஷம் சித்திரையில் சித்திரை நாள்)

1978

வெளியீடு:

ஸ்ரீஅநந்தாழ்வார் கைங்கர்ய சபா

சென்னை.

acharya.org

ஸ்ரீ :

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	ஸ்ரீதிருமலை அநந்தாழ்வார் வைபவம் சில முக்கிய நிகழ்ச்சிகள் — ஆங்கிலத்தில்	1
2.	அநந்தாழ்வார் வைபவம்	4
3	ஸ்ரீ ராமானுஜ சதுஸ்லோகீ. (ஸ்ரீ அநந்தாழ்வார் அருளிச்செய்தது)	21
4.	கோதா சதுஸ்லோகீ ,,	22
5.	திருமலை அநந்தாழ்வார் திருமஞ்சனக் கட்டியம்.	24
6.	ஸ்ரீ அநந்தாழ்வார் வாழி திருநாமமும் நாள்பாட்டும்.	25
7.	ஸ்ரீ அநந்தாழ்வார் மங்கள தசச்லோகீ.	26
8	ஸ்ரீ மதநந்தார்ய அஷ்ட ச்லோகீ.	27
9	தனியன்கள்.	30
10.	ஸ்ரீ அநந்தாழ்வார் — சில சரித்திர ஆதாரங்கள் By. Dr. K. V. Raman.	31

அட்டையில் : ஸ்ரீ அநந்தாழ்வார் (குணக்கரம்பாக்கம்)

acharya.org

ஸ்ரீ :

ஸ்ரீ அனந்தாழ்வான் வைபவ முன்னுரை

நமது பூருவாசாரியர்களுக்குப் பலவகைகளினால் பெருமையிருக்கச் செய்தேயும் திவ்யதேச ப்ராவண்ய நிபந்தனமான பெருமை ஒப்புயர்வற்றதாகும். எம்பெருமானார்க்கு முற்பட்ட ஆசார்யர்கள் ஒரோ திவ்ய தேசங்களில் வாழ்ந்து கொண்டு காலங்கழித்தார்களேயன்றிப் பல திருப்பதிகளிலே மண்டினார்களென்று சரித்திரமில்லை. "மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடுநாள் — திருவாதிரை நாளே!" என்று நாம் அநுஸந்தித்துவருவதற்கேற்ப எம்பெருமானார் காலத்திலேயே திவ்யதேச பரிஷ்காரங்கள் சிறப்புற்றபடியினால் "பகுதியே பரவித் தொழுந்தொண்டர்" என்றும், "உலக மேத்துங் கண்டியூரரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று மண்டினார்" என்றுமுள்ள திருமங்கையாழ்வாரருளிச்செயல் பிறகே ஸாரித்தகமாயிற்று. அந்த எம்பெருமானார் தாமும் பல திருப்பதிகளில் பிரவணராயிருக்கச் செய்தேயும்

ஜகதாசார்ய ஸிம்மாஸநாதிபதி
மஹாமஹோபாத்யாய
ஸ்ரீ உ. வே. ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியார்
ஸ்வாமி

"ஸ்ரீமந்! ஸ்ரீரங்கச்ரிய மநுபத்ரவாம்
அநுதிநம் ஸம்வர்த்தய"

என்று ஆசாஸித்து வருகிறபடி திருவரங்கம் பெரிய கோயிலிலே அதிசயித ப்ராவண்ய முடையராய் விளங்கினார். திருக்கச்சி நம்பிகள் தமது திருநாமத்திற்கேற்ப கச்சித்தேவப்பெருமாள் ஸன்னிதியிலே ப்ராவண்யப்ரஸித்தியையுடையராயிருந்தார். இங்ஙனே அனந்தாழ்வான் "திருமலையனந்தாழ்வான்" என்கிற ப்ரஸித்திக்கு ஏற்பவும்,

"மலையில் வேங்கடவற்கு மாமனார் வாழியே"

என்கிற வாழி திருநாமப் படிக்கும் திருமலையில் வாழ்ச்சி பெற்றதனால் வீறு பெற்றாராயிற்று. இற்றைக்கும் திருவேங்கடமுடையான் ஸன்னிதி திருவாசலில் முகப்பே விளங்கும் கடப்பாறையொன்றே அனந்தாழ்வானுடைய அப்ரதிமப்ரபாவத்தை மூதலிக்கவல்லது. ஈடுமுப்பத்தாறாயிரத்திலும், மூவாயிரவ்யாக்கியானங்களிலும் ஆங்காங்கு காணும் நிர்வாஹ விசேஷங்களும் அனந்தாழ்வானுடைய பாண்டித்யப்ரபாவத்தையும், ராஸிக்ய விசேஷத்தையும் நன்கு புலப்படுத்துவன.

கூரத்தாழ்வான் திருக்குமாரரான பட்டர் தம்முடைய சாஸ்த்ரார்த்த நிஷ்கர்ஷங்களுக்கு அனந்தாழ்வானுடைய திருவுள்ளத்தையே ஸம்வாதப்ரமாணமாகக் கொள்வரென்பது ப்ரஸித்தம். பல சொல்லி என்? திருவாய்மொழியில் (1–10—11) * தணிவிலர் கற்பரேல் கல்வி வாயுமே * என்ற விடத்து — கல்வி வாய்ப்பதாவது கைங்கர்ய பர்யந்தமாகையென்று ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றுகிறார்கள். பெரியாழ்வார் மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணா! — உன் கோயில் கடைப்புகப்பெய் திருமாலிருஞ்சோலை யெந்தாய்!" என்று கோயில் வாசற்கடையில் கிடப்பதையே பரம புருஷார்த்தமாகப் பிரார்த்தித்தார். எம்பெருமானார் தாமும் "நித்யகைங்கர்ய ப்ராப்த்யபேக்ஷய" என்றும், "நித்ய கிங்கரோ பவாநி" என்றும் ஆசம்ஸித்து "நித்ய கிங்கரோ பவ" என்று திருமுகப் பாசுரம் பெற்று க்ருதார்த்தராயினர். அர்த்த பஞ்சகத்தில் புருஷார்த்தஸ்வரூபம் கைங்கர்யமேயென்கிற அறுதியீடு எம்பெருமானார் தரிசனத்தில் அஸாதாரண விசேஷார்த்தமாக விளங்கா நின்றது. இதில் நிகரற்ற பெருமை பெற்ற நம் அனந்தாழ்வானுடைய வைபவத்தை மிகவழகிய முறையில் வெளியிடுமிப்புத்தகம் பகவத், பாகவத, ஆசார்ய பக்திமான்களுக்குச் சென்னிக்கு மலர்ந்த பூவாக நீடுழி விளங்க வேணும்.

ப்ர. ப. அண்ணங்கராசாரியார்

acharya.org

ஸ்ரீ :

ஸ்ரீ அநந்தாழ்வார் கைங்கர்ய சபா

சென்னை.

தலைவர் :

ஸ்ரீ உ. வே. தி. அ. சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்மாசாரியார் ஸ்வாமி

★

உபதலைவர்கள் :

ஸ்ரீ உ. வே. தி. அ. கிருஷ்ணமாசாரியார் ஸ்வாமி
(திருப்பதி)

ஸ்ரீமான் தி. அ. ஸ்ரீநிவாசாசாரியார் ஸ்வாமி
(Southern Railways)

★

செயலாளரும், மலர்த்தொகுப்பாளரும் :
தி. அ. ராஜகோபாலன்
(Madras Telepones)

உதவிச்செயலாளரும், பொருளாளரும் :
T. C. A. அநந்தாழ்வான்
(BHEL)

★

அங்கத்தினர்கள் :

ஸ்ரீமான் T. A. K வெங்கடாசாரியார்
(Oriental Manuscripts Libeary)

,, T. C. A. ராமாநுஜம்
(Income-tax)

,, T. A. பாஷ்யம்
(Port Trust)

,, T. A. P. ஸ்ரீ ரங்காசாரி
(Madras Telephones)

acharya.org

ஸ்ரீ

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நந்தார்யமஹா குரவே நம:

அரவரசப் பெருஞ்சோதியாம் ஆதிசேஷன் விசிஷ்டாத் வைதமார்க்கத்தை உலகுக்கு உபதேசிக்க எம்பெருமானாராகத் திருவவதரித்தமையும், அவைகளை அனுஷ்டித்துக் காட்ட அவர் தம் அம்சாவதாரமாக அநந்தாழ்வாராக அவதரித்தமையும் யாவரும் அறியப்பெற்றதே. ஸ்ரீ எம்பெருமானாரது 16 வது ஸஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவம் நடந்து முடிந்த பிங்கள வாண்டு ஸ்ரீ அநந்தாழ்வாருக்கு 925 ஆண்டுகள் பூர்த்தியடைந்தன.

தன் ஆசார்யரான எம்பெருமானாரிடம் அநந்தாழ்வார் பூண்டிருந்தபக்தியைத் தெரியப்படுத்தும் வகையிலும், கைங்கர்யத்தின் பெருமையை புணர்ந்து அவர்து வழியில் நாமும் நடக்க வேண்டியதை புணர்த்தும் வகையிலும் அவருடைய வைபவத்தைப் பற்றின புத்தகம் இப்போது கிடைப்பதரிதாக யிருப்பதால் இம்மலர் வெளியிடப்படுகிறது. இம்மலரில் அநந்தாழ்வாரின் திவ்ய சரித்திரமும், அவரது அருளிச் செயல்களும், அவரது வாழி திருநாமங்கள், தனியன்கள் (திருவேங்கட முடையானே ஸாதித் தருளின தனியன்களுட்பட) நாள் பாட்டு ஆகியவையும், கோயில், திருமலை, பெருமாள் கோயில், திருநாராயணபுரம் ஆகிய திவ்ய தேச எம்பெருமான்களின் திருவுருவப் படங்கள், மதுரகவியாழ்வார், எம்பெருமானார், அருளாளப் பெருமாளெம்பெருமானார், அநந்தாழ்வார் ஆகியோரின் திருவுருவப் படங்கள் யாவும் இடம் பெறுகின்றன.

யாவரும் ஸேவித்து இன்புற்று, அவர்களது திருவருளுக்குப் பாத்திரமாவார்களாக.

சபையினர்.

acharya.org

ஶ்ரீ

மேஷே சித்தா ஸமுத் பூதம் யதிநாத பதாஶ்ரிதம்
ஶ்ரீ வேங்கடேஶ சத் பக்தம் அநந்தார்யம் அஹம் பஜே!

விண்ணவர்கள் வந்து தொழும் வேங்கடமாலடியிணையைத்
திண்ணமிது வென்று தெளிவுற்று - நண்ணிக்
காலமலர் பரித்திட்டுக் கண்டு தொழுமநந்தாழ்வான்
கோல மலரடியிணையே கூறு.

அறுமறைகள் தேடறிய அணிவேங்கடமால்
திருமறுமார்பில் திருமாலை - ஒருமையுடன்
தேடியளித்தருளும் சீரநந்தாழ்வானை
நாடியடி தொழுவோம் நாம்.

acharya.org

ஸ்ரீ:



Srimathe Ramanujaya namaha :

Sri Anantharya Maha Gurave namaha :

ANANTHALWAR VAIBAVAM

Lord Sri Krishna enunciates the purpose of his Avatars as protection of good and estruction of the evil and establishment of virtues "Dharma"

"பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் ! தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே".

Our Acharyas have elucidated from his further statement in

"யதாயதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத அப்யுத்தாநம தர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்"

"ஜ்ஞாநீத்வாத்மைவ மேமதம்"

at the Lord not being content with the ach evement of His Avatars as not commensurate ith his aspiration to get many Jeevas of the world, He creates or arranges the incarnation Acharyas for the successful fulfilment of the gracious intention of giving the Bliss to any. Thus, the world was blessed to have "Anantha's" incarnations.

Lord Anantha or Adhisesha not content with his first incarnation in human form Sri Ramanuja in Kaliyuga for the codification and propagation of the Vishishtadvaitha octrine, took another form as Ananthalwar in the contemporary period to propagate the rtue of Kainkarya and Acharya Bhakthi.

Thus he came to be born as the son of Sri Kesavacharya of Bharadhwaja Gothra the year 'Vijaya' the 975th of Sakha Era in the month of Chaithra, on the day of hithra Star at Sirupudur in Mysore and was named Anantharya.

He was taught the Vedas and Vedangas and Divyaprabandhas of Alwars at the ght age. On hearing about Sri Ramanuja, he went to Srirangam and became his desciple.

acharya.org

On a particular day Ramanuja, while commenting upon the stanza 'சிந்து பூ மகிழும்' 'in Bhagavath Vishayam (Thiruvoi Mozhi) of Saint Nammmalwar, asked 'is there any one who is prepared to proceed to the valley of flowers, lay out a garden and serve the Lord Venkateswara with garlands of flowers every day ?'. Anantharya alone rose up, touching his master's feet said 'Be it mine the service, grant it to me'. The teacher affectionately appreciated him and called him "AANN PILLAI".*

Anantharya took leave of him and went to Thirumalai, laid out a splendid flower garden and named it after his Acharya Sri 'Ramaunja'. Very soon he grew as dear to Lord venkateswara" as Kanchipurna to Lord Varadaraja.

At Thirumalai he constructed a tank and named it 'Ramanuja' after his master. which is now called as "ANANTHALWAR LAKE". During the progress of the work, one day while he was digging at the tank he made his wife who was pregnant at that time, carry away the earth on her head. Lord venkateswara was pained to the heart at this unfeeling act (as he thought). So he met her half-way disguised as one of the disciples of her husband and relieved her of her load, as if by her husband's orders. It surprised Anantharya to see her return so quickly every time; he watched her from 'a distance and pounced upon the audacious boy. 'You mischievous imp! How dare you come between me and my service of the Lord?. I shall make your back smart nicely for this, 'and he rushed at him with his spade uplifted. The offender dropped the basket, and ran away with all speed; and Anantharya who followed close upon his heels, saw with amazement and awe, that he disappeared with in the temple. Then only he realised that it was lord *Thiruvengadanatha* who came to his help.

On another occasion, he was in the garden, gathering flowers for the garland (he daily laid at the foot of the Lord), when a snake bit him severely in the hand. A friend of his happened to notice it and said 'what carelessness! Allow me to get you medical assistance in time'. Anantharya did not care. *LORD VENKATESWARA* him-self called him and asked why he had not taken any medicine. 'Ho! Ho!'laughed Anantharya, 'here is a mighty uproar about a trifle. If the biter proved stronger, I would but bathe in the waters of the holy Viraja and stand before the Lord of *Vaikuntham* (Remembering his original form as Adhisesha). If the bitten one proved too tough, I would bathe in the sacred swami pushkarini tank on the Holy Mount and stand before Lord *Venkatesvara*".

While on a journey to his native parts, he halted near a water-course to partake of the food he had brought with him from Thirupathi and found to his utter amazement that it was covered with ants. He was seized with a great fear and turning to his disciples said 'These be those about whom Kulasekhara Alwar sang: 'May I be born on the Holy Mount as any insect, however insigni ficant. Convey them back carefully, and reverently to where they were. It was not given me to be born within the sacred precincts of the Holy Mount'. why should I offend these who can claim that envied distinction ?

Note : Hence his descendants are called "Thirumalai Ananthanpillai" They have it as their initials as T. A. Some adding another initial to indicate the native place like T.C.A., T.A.P., T.A.K. etc.

acharya.org

One day he was preparing the garland for the Lord, when Lord *Venkatesa* ordered his attendance before him. Anantha did not *hear* to that and when the garland was ready, proceed d to the shrine. 'So you would not come when I called for you. Am I nothing in your eyes?' asked *Lord Venkateswara*.

'I know not that,' replied Anantha, and continued 'I only know that when engaged n the Service of the Lord or of His Servants I have no eyes nor ears for anything else'.

Verily, this was cool enough: but the Lord would not stop there, he would tempt Anantha further.

'What ! Even for me ? !.

'Well, did I make any exception ? I think, not'.

This was worse: and strange enough, the Lord was more mystified than offended at this evident snubbing administered to him. He had a vague presentment that Anantha would come out right in the end with some unanswerable reason. So he decided to see the matter out and said 'Would you defy my commands too?' Now, if I ask you to go away from here, what would become of the boasted service you lay so great a store by? You may take away your garlands yourself'.

"Ah ! My Lord, 'rejoined Anantha, in slow thoughtful accents, I submit that I have not come here to carry out your commands, it is in deference to the command of Emperumanar, the great Arharya of all Sri Vaishnavites that I have come to do flower service to you. I was very particular that I should not suspend the process of the service, even if it be at your bidding. Bearing in mind that your habitation of this mount is just a little earlier than mine. I cannot understand how rightfully you can ask me to quit. The flower offering of mine is at my Acharya's bidding. Whether you accept the same or not I leave it here'.

The Lord was pleased with Ananthalwar's devotion to Ramanuja and to his commands and vow d to grant Eternal Bliss to Ananthalwar, his descendents, and disciples.

Out of the various means of attaining Bliss Viz., Karma, Gnana, Bhakthi and Prapathi Yogas, Prapathi has been adopted as the best by our great Acharyas. The quint essence of this Prapathi, on still further analysis has been concluded to be Acharya Nishta professed to us by practice by *Sathrugna* and *Madhurakavigal*. It is this supreme path that was adopted and practised by ANANTHALWAR. His descendents are hence called MADHURAKAVI DASA'. May we strive to follow this ideal of the great Acharya.

acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீ வேங்கடேச பரப்ரம்மணே நம:
ஸ்ரீ மதே ராமாநுஜாய நம:
ஸ்ரீ மதநந்தார்ய மஹாகுரவே நம:

அவதாரிகை

எம்பெருமானார் எனப்படும் ஸ்ரீராமாநுசரின் 961ம் திருவவதார மஹோத்சவம் இப்பிங்களவாண்டு மிக விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. அவ்விராமாநுசர் நமக்களித்துள்ள மிகப் பெரிய செல்வம் யாதெனில், தாம் எம்பெருமானைச் சரணடைந்து, தம்முடைய ஸம்பந்தம் பெற்றவர்களெல்லோரும் கலமந்தமில்லதோர் நாட்டை அடையும் பாக்கியத்தை வரமாகப் பெற்றுத் தந்திருக்கையேயாகும். இது ஸ்வாமி, திருக்கோட்டியூர் நம்பிகளிடத்தே பெற்ற அரிய அர்த்த விசேஷத்தைப் பாருலகில் ஆசையுடையோரெல்லாம் பயன்பெறும் வண்ணம் கோபுரத்தில் நிலையில் நின்று உபதேசித்ததைக் காட்டிலும் உயர்ந்ததாகும். ஏனெனில் அங்கு அந்த உபதேசத்தைப் பெற்றவர்கள் மட்டுமே நன்மை பெற்றுய்ந்தனர். ஆனால் முன்னம் சொல்லப்பட்ட வரத்தின் பயனாக அவரது ஸம்பந்தம் பெற்றவரெல்லோரும் உய்கின்றனர். ஆகவே, நாம் அத்தகைய பாக்கியத்தைப் பெறவேணுமாகில், நாமடையவேண்டியது அவரது ஸம்பந்தமேயாகும். அதைப் பெறுவதாவது அவரிடம் பக்தி பண்ணுகையும், அவரது உபதேசங்களைப் பின்பற்றுகையும், அவரது வழி வந்தவர்களிடம் பக்தி பண்ணுகையுமேயாம்.

அவ்வாறு ஸ்ரீ ராமாநுஜரிடம் மிக்க பக்தி பூண்டு அவரது இன்னருளுக்குப் பாத்திரமானவர்களில் முக்கியமானவர்கள் எழுபத்துநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளாவர். அவர்களில் திருமலை அநந்தாழ்வார் பரிகணிதர். அவருடைய ப்ரபாவத்தை ஸேவிப்பது அவருடைய ஆசார்ய பீடத்தை வகிக்கும் அவருடைய வம்ஸத்தவர்கட்கும், சிஷ்யவர்க்கங்களுக்கும் மட்டுமல்லாமல் எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் உத்தேச்யமானதே

அத்யாயம் 1

அநந்தாழ்வார் திருவவதாரம்

இளையாழ்வாரெனப்படும் ஸ்ரீராமாநுஜராக ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்த திருவனந்தாழ்வான் அவ்வவதார உத்தேச பூர்த்திக்காக மைசூர் ராஜ்யத்திலுள்ள சிறுபூதூரில், விஜய வருடம் (சாலிவாஹன ஸகாப்தம் 975-ம்) சித்திரை மாதம், சித்திரை நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் பாரத்வாஜ கோத்திரத்தில் (யஜுஸ்ஸாகை) உத்தம ஸ்ரீவைஷ்ணவரான ஸ்ரீ கேசவாசாரியாருக்கு குமாரராகவும் ஸம காலத்தில அவதரித்தார்.

எம்பெருமானாரை ஆஸ்ரயித்தல்

இளம் வயதில் ஸகல சாஸ்திரங்களையும் கற்றுப் பிறகு சகல ஸ்ரீவைஷ்ணவர்களாலும் ஆசார்யராகப் பற்றப்படுபவராகவிருக்கிற ராமாநுசரை ஆசார்யராக அடையும் பொருட்டு தொண்டனூர் நம்பி, மருதூர் நம்பி ஆகியோருடன் திருவரங்கம் சென்று எம்பெருமானாரை

acharya.org

ஆச்ரயித்தார். எம்பெருமானார் அவர்களுக்கு, தம்மிடம் ஆச்ரயித்த அருளாளப் பெருமாளெம்பெருமானாரைக் கொண்டு திருவிலச்சினை செய்வித்தார். அவர்தாமும் நான் உங்களுக்கு ஆசார்யனாக இருப்பது குருவியின் தலையில் பனங்காயைக் கட்டினாற்போலன்றோ இருக்குமென்று சொல்லி அவர்கட்கும் தமக்கும் எம்பெருமானாரே ஆசார்யரென்று பணித்தார்.

எம்பெருமான் நர, நாராயணனாகத் திருவவதாரம் பண்ணினாப் போலே திருவனந்தாழ்வானும் உடையவர், அனந்தாழ்வானென்று குரு சிஷ்ய பாவத்திலிருந்து சாஸ்திர உபதேசம், அனுஷ்டானம் முதலிய செய்தாளினார். ஞானானுஷ்டானங்களில் சிறந்த ஸ்ரீ அனந்தாழ்வார் திருவடிகளில் பல ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆச்ரயித்தனர்.

அத்தியாயம் 2

எம்பெருமானார் நியமனப்படி திருமலைக்கெழுந்தருளுதல்

ஒருசமயம் உடையவர் கோஷ்டியில் பகவத் விஷய காலக்ஷேபம் நடந்துகொண்டிருக்கையில் "சிந்து பூ மகிழும் திருவேங்கடத்து" எனும் கட்டத்தில் எம்பெருமானார் "திருமலையில் திருவேங்கடமுடையானுக்குகப்பாக நந்தவனமமைத்துக்கொண்டு கைங்கர்யம் செய்வாரெவரேனுமுண்டோ?" என்ன, அனந்தாழ்வார் "அடியேன் விடை கொள்கிறேன்" என்றார். அந்தக் காலத்தில் திருமலை ஒரு அடர்ந்த வனமாக இருந்தபடியாலும், மக்கள் புழக்கம் குறைவாக இருந்தபடியாலும், குளிர்மிகுந்து துஷ்டமிருகங்கள் சஞ்சாரமுமதிக மிருந்தபடியாலும் அங்கு வாசம் செய்வது மிகவும் கடினமாக இருந்தது அவ்வாறான இடத்திற்குச் செல்ல அனந்தாழ்வார் தானாகவே முன்வந்ததுகண்டு எம்பெருமானார் மனம் குளிர்ந்து "திருமலையிலுள்ள மற்ற அசேனகர்யங்களையறிந்தும் என் ஆணையை நிறைவேற்றுவதையே முக்கியமானதாகக் கருதினீர் போலும்! என்னே! உமது ஆசார்ய பக்தி! அனந்தா! நீரே ஆண்பிள்ளை! எனப் புகழ்ந்தார். அதுபற்றியே அனந்தாழ்வாரது வழிவந்தோர் அனந்தாண்பிள்ளை என்று அழைக்கப்படுகின்றனர். அனந்தாழ்வாரும் ஆசார்ய நியமனப்படியே திருமலைக்கெழுந்தருளினார்.

திருமலையில் திருநந்தவனம் அமைத்தல்;

திருவேங்கடத்திற்கெழுந்தருளின அனந்தாழ்வார், புஷ்ப கைங்கர்யம் செய்யவேண்டித் திருமலையில் ஒரு நந்தவனம் சிறுவ, அப்பணிக்கு உதவும்படி ஒரு ஏரியும் வெட்டி அவற்றிற்குத் தன் ஆசார்யரான "ராமானுஜன்" என்னும் திருநாமம் சூட்டி, இது ஆசார்யன உகந்தருளின கைங்கர்யம் என்று பக்தியோடு புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார். இந்த ஏரியை அவர் தம் கையாலேயே கடப்பாறை கொண்டு மண் வெட்டி, தம் தேவியாரை மண் சுமந்து செலுத்தும்படி பணித்தார். அச்சமயம் அவரது தேவியார் பூர்ண கர்ப்பிணியாக இருந்தபடியால், திருவேங்கடமுடையான அவள்மேல் கருணைகொண்டு, தானே மண் சுமக்கக்கருதி ஒரு அழகிய ப்ரமசாரி வேஷந்தரித்து அனந்தாழ்வாரிடம் வந்து "அனந்தாழ்வாரே! உமது தேவியாரோ பூரண கர்ப்பிணியாக இருப்பதால மண் சுமக்க சக்தளல்லள். நீரும் வ்ருத்தராகையாலே மண் வெட்ட சக்தரல்லீர். ஆகவே கடப்பாறையை என்னிடம் கொடும். நான் மண்ணை வெட்டியெடுத்துக் கொண்டுபோய் தேவரீர் சொல்கிற இடத்தில் கொட்டிவிட்டு வருகிறேன்"; என்றார். அதைக் கேட்ட அனந்தாழ்வாரும் "வாரீர்! அழகிய ப்ரமசாரியே! நீர் மிருதுவான தேகமுடையவராக இருப்பதால் ஆபரண பாரத்தாலேயே வாடியிருக்கிறீர். ஆகவே உம்மைப் போனறவர்கள் மண் வெட்டவோ அல்லது சுமக்கவோ தகுந்தவர் அல்லர். மேலும் அப்படிச் செய்தால் உடனே வாடிவிடுவீர். நானோ அப்படிச் செய்யாவிடில் வாடிவிடுவேன். ஆகவே நீரும் பகவத் கைங்கர்யம் செய்ய ஆசைப்பட்டால் தனியாக ஏதாவது செய்யும். என் கார்யத்தைக் கெடுக்கவேண்டாம். அப்படியும் தடுத்தால் இக்கொட்டால் (கடப்பாறையால்) அடித்து விரட்டி விடுவேன் என்று சினந்து கூறினார். ஆகவே அந்த ப்ரம்மசாரியும் அவருடன் மேலும் பேசாமல் சிறிது தூரம் சென்று அவரது தேவியாரிடம் இனிய வார்த்தைகளைச்

acharya.org

சொல்லி இசையப் பண்ணித் தான் விரும்பிய பணியை அநுமதிக்கும்படி செய்து பிறகு தானே மண் கூடையைச் சுமந்து சென்றான். உடனுக்குடன் கூடையை வேகமாகக் கொணர்ந்து வரும் தன் பார்வையைக் கண்ட அநந்தாழ்வார் "நீ மண்ணை ஸமீபத்திலேயே கொட்டிவிட்டு வருகிறாயா என்ன? என்று கேட்க, அவனும், 'ஸ்வாமின்! ஒரு ப்ரம்மசாரி நடுவழியில் கூடையை வாங்கிக்கொண்டுபோய் நீர் சொன்ன இடத்தில் கொட்டிவிட்டு வருகிறான். ஆகையால் சீக்கிரம் வருகிறேன்'' என்று உண்மையைக் கூறினள். அதைக் கேட்ட அநந்தாழ்வார் கோபங்கொண்டு விரைந்து ப்ரம்மசாரியைப் பார்த்து ''அடே! ப்ரம்மசாரியே, என் கைங்கர்யத்துக்கிடையூறு செய்யாதே! என்று அவனைத் துரத்திக்கொண்டு சென்றார். அவனும் வேகமாக ஓடிச்சென்று ஒரு மரத்தில் ஏறிக்கொண்டான். பிறகு துரத்திக்கொண்டு வந்த அநந்தாழ்வாரைப் பார்த்து. என்னை அடிக்காமல் விட்டீரானால் எனது பட்டு வேஷ்டி, ஸ்வர்ண குண்டலங்கள், கையிலுள்ள பவித்திர மோதிரம் ஆகியவற்றை உமக்குத் தருவேன்'' என்ன அவரும் அப்போது வானரமிடத்து கீழே இறங்கினவுடன் பிடித்துக்கொண்டு சிக்ஷிக்கலாமென்று எண்ணி அவனை இறங்கு என்றார். ஆனால் கீழே இறங்கின ப்ரம்மசாரி ஓடிவிடவே அநந்தாழ்வாரும் அவனைத் துரத்திச்சென்று தன் கடப்பாறையை அவனை நோக்கி ஓங்க அது அவன் முகவாய்க்கட்டையில்பட்டு இரத்தம் வழிந்தது. அதனுடனே அவன் கோவிலுள் நுழைந்து கதவைத் தாளிட்டுக்கொண்டுவிட்டான். அநந்தாழ்வாரும் அவன் வெளியில் வருவானெனக் காத்திருந்தார். அச்சமயம் சூர்ய அஸ்தமன காலமாகவே திருவாராதனத்திற்காக அங்கு வந்த அர்ச்சகர்கள் விவரமறிந்து ''வாராய்! பிள்ளாய்! திருவாராதனக் காலம் மீறிப்போகிறது கதவுகளைத் திறவாய்'' என்றனர். உடனே கதவுகள் திறந்தன எல்லோரும் உள்ளே சென்று அந்த ப்ரம்மசாரியைத் தேடிக் காணாமற்போகவே ஆச்சர்யப்பட்டு பிறகு பெருமாளை சேவித்தனர் புன்சிரிப்பால் மலர்ந்த முகமும், மோவாயிலிருந்து பெருகும் ரத்தமுமாக எம்பெருமானை ஸேவித்த அநந்தாழ்வார் 'ஸ்வாமின்! இது என்ன விசித்திரம்! திருமுக மண்டலத்தில் புன்சிரிப்பும்; மோவாயில் ரத்தம் பெருகுவதுமாக ஸேவை ஸாதிப்பதேனோ'' என்று கேட்டார் பகவானும் 'வாரீர்! அநந்தாழ்வானே! உமது கைங்கர்யத்தைச் சிறிது செய்யவேணுமென்று வந்து. உம்மால் இந்நிலையடைவிக்கப்பட்டேன். நீர்தானே என்மேல் கொட்டை எறிந்தீர்! அதற்குள் மறந்துவிட்டீரா? என்று கேட்டார், அதைக்கேட்ட அநந்தாழ்வார் மிகவுமஞ்சி ''ஸ்வாமின்! திருவேங்கடமுடையானே! மஹாபராதப் பெருங்கடலில் மூழ்கினேன். அடியேனை க்ஷமித்தருளவேணும் என்று வேண்டி எழிலைப்பால் மாப் பூத்துகளை அவரது மோவாயில ஒற்றி இரத்தப்பெருக்கை நிறுத்தினர் திருவேங்கடமுடையானும் அநந்தாழ்வாரே! கைங்கர்யத்தில் உமக்குள்ள சிரத்தையிலே நான் ஆனந்தக் கடலில், அழுந்தினேன். இந்த இரத்தப்பெருக்கும் நமக்கு ஆனந்தக்கண்ணீர்ப் பெருக்காயிருக்கின்றது, என்று கூறி, தான் ஏற்கனவே தருவதாகக் கூறிய, தான் உடுத்துக்கொண்டிருந்த பீதகவாடை குண்டலங்கள், பவித்ரம் முதலிய வரிசைகளை அநந்தாழ்வாருக்களித்து கௌரவித்தருளினன்.

அநந்தாழ்வாரிட்ட பற்றுஸ்தானத்தில்தான் நித்யம் தோமாலை ஸேவைக்கு முன்னால் பச்சைக் கற்பூரக் காப்பு சாத்தப்படுகிறது. களைந்தத் ஸ்ரீபாத ரேணுவாக விநியோகப்படுகிறது அநந்தாழ்வார் உபயோகப்படுத்திய கடப்பாறை திருவேங்கடமுடையான ஸன்னிதியில், முன் கோபுரத்தினுட்புறம் தொங்கவிடப்பட்டிருப்பதை நாம் இன்றும் காணலாம்.

அத்தியாயம் 3

அநந்தாழ்வார் சிஷ்யரான ஸ்ரீவைஷ்ணவதாஸர் பேறு பெறுதல்

ஒரு சமயம். அனந்தாழ்வாரின் சிஷ்யர்களான சில ஸ்ரீ வைஷ்ணவர்கள், அநந்தாழ்வார் எம்பெருமானாரின் நியமனத்தால் திருமலைக்கெழுந்தருளி கைங்கர்யம் செய்து வருகின்றாரென்றறிந்து அவரையும், திருவேங்கடமுடையானையும் ஸேவிக்கவேண்டுமென்று திருமலைக்குவந்து

கொண்டிருந்தனர். வழியில் வளர்த்தான் மங்கலமென்னும் ஊரில் வாழ்ந்து வந்த தார்மிஷ்டனான ஒரு பிராமணன் அவர்களை உபசரித்துப் பின் தானுமவர்களைப் பின்தொடர்ந்துவந்து தன்னையும் ஒரு ஸ்ரீவைஷ்ணவனாகக் கொள்ளவேண்டுமென்று ப்ரார்த்திக்க அவர்கள் பதிலேதும் சொல்லாமற் போகவே அவர்களைப் பின்தொடர்ந்து வந்து திருமலையையடைந்தான். அங்கு அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் அநந்தாழ்வாரை தெண்டன் ஸமர்ப்பித்ததும், அவர் ஸ்ரீவைஷ்ணவர்களைக் கௌரவித்ததும் கண்டு மறுபடியும் அவர்களிடம் ப்ரார்த்தித்துக்கொண்டான். ஆகவே, அவர்களும் அநந்தாழ்வாரிடம் ஸ்வாமின்! இவர் ஒரு ப்ராம்மணர், தார்மிஷ்டர். திருவேங்கட யாத்திரையில் எங்களோடு ஊக்கத்தோடு வந்ததன்றி தேவரீருடைய திருவடிகளை ஆஸ்ரயிக்க வேண்டுகிறார். இவரை அனுக்ரஹித்தருள வேணுமென்று விண்ணப்பித்தனர். அவர்கள் மிகவும் ப்ரார்த்திக்கபடியால அனந்தாழ்வாரும் சரியென்று ஒப்புக்கொண்டு "ஓய் பிராம்மணரே! நம்பக்கல் ஸமாஸ்ரயணம் கேட்கவேண்டியிராயின் உமது செல்வங்களெல்லாம் பகவத், பாகவத கைங்கர்யங்களுக்குச் செலவாகிவிடும். நாம் பெறும் பேறும் பெறலாம். இது உமக்கிஷ்டமாகில் நீராடிவிட்டு வரலாமென்றார். அவ்வந்தணரும் அவ்வாறாகில் நான் மிக்க பாக்யம் பெற்றவன், என்று சொல்லி விரைவில் நீராடிவந்து அநந்தாழ்வாரிடம் பஞ்ச ஸம்ஸ்காரங்களைப் பெற்று ஸ்ரீவைஷ்ணவதாஸன் எனும் நாமம் பூண்டு அநந்தாழ்வாரின் சிஷ்யரானார், சில காலம் அநந்தாழ்வார் பக்கலிலே தத்வார்த்தங்கள் கேட்டுப் பிறகு விடைபெற்றுத் தன் இருப்பிடம் சென்றார். அங்கு அஹங்காரம் ஒழிந்து, ஞானம் பெற்றவராய் பகவத், பாகவத கைங்கர்யத்திலீடுபட்டு ஸ்ரீவைஷ்ணவர்களை ஆராதித்து வந்தார். சில காலங்கழித்து தன் செல்வத்தை மூன்று பாகமாக்கி, ஒன்று தாயாதிகள், ஒன்று தகப்பனார்க்கும் கொடுத்துத் தனக்குரிய ஒரு பாகத்தை எடுத்துக்கொண்டு திருமலைக்கு வந்து சேர்ந்து அநந்தாழ்வார் திருவடிகளிலே ஸமர்ப்பித்தார். அநந்தாழ்வாரும அவரை உபசரித்து நல்வார்த்தைகளால் உகப்பித்து, நாம் சொல்லியபடியே த்ரவ்யங்களையெல்லாம் பகவத் பாகவத கைங்கர்யத்தில் நற்செலவாக்கிவிட்டீரே எனப் பாராட்டினர். அதைக் கேட்ட சிஷ்யரும், ஸ்வாமின்! தேவரீர் திருவடிகளை ஆஸ்ரயிக்கும்போது தேவரீரருளிய இரண்டு வார்த்தைகளில் அடியேனுடைய செல்வம் நல்வழியில் செலவாகிவிடுமென்பது பலிதமாகிவிட்டது. இரண்டாவதாகிய "நம் பேறு பெறக்கடவீர்" என்ற வார்த்தையும் பலிக்க வேண்டுமென்றார். உடனே அநந்தாழ்வாரும், "ஆயின் வாருமென்றேநு, திருவேங்கடமுடையானை ஸேவிக்கப் போவோம் என்று சொல்லி ஸ்ரீவைஷ்ணவதாஸருடன் ஸந்நிதிக்குச் சென்று திருவேங்கடமுடையான் முன்பு த்ரவ்யங்களைச் சமர்ப்பித்து" திருவேங்கடத்தெம்பெருமானே! இந்த வைஷ்ணவதாஸர் நம் பக்கல் பகவத் ஸமாச்ரயணம் பண்ணினபோது நாம் உம்முடைய ஐச்வர்யம் பகவத் பாகவத ஆசார்ய கைங்கர்யங்களில் செலவாகிவிடும், நீரும் நம் பேறு பெறுவீர் என்று இரு வார்த்தைகளைத் தேவரீர் திருவுள்ளம் பற்றியதாக விண்ணப்பித்தேன். அவற்றில் முதல வார்த்தை பலித்தது. இரண்டாவது வார்த்தையும் பலிக்கவேண்டுமென்று இவர் ப்ரார்த்திக்கிறார். ஆகையால் மாசுச: (கவலைப்படாதே! மோக்ஷம் தருகிறேன்) என்று தேவரீர் அருளிச்செய்ய வேணும்" என்று ப்ரார்த்தித்தார். அது கேட்ட திருவேங்கடமுடையானும் அவருக்குத் தீர்த்தப்ரசாத சடகோபங்களைத் தந்தருளி வாரீர் அநந்தாழ்வாரே! உம்மைப் போலவே இவரும் இத்தேகத்தை விட்டபின் பரமபதம் சேரக்கடவர்" என்றருளித் தன் மலர்க்கழல்களை அவ்விருவர் சிரங்களிலும் வைத்தருளி விடை கொடுத்தருளினர்.

ஸ்ரீவைஷ்ணவதாஸரும் எப்போதும்போல் அநந்தாழ்வாரிடம் கைங்கர்யம் செய்துகொண்டும், தத்வார்த்த உபதேசம் பெற்றுக்கொண்டும் காலம் கழித்து வந்தார். ஒருநாள் எம்பெருமான், அநந்தாழ்வான் திருவடியையே தஞ்சமாகப் பற்றிக்கொண்டு மோக்ஷம் பெறத் தகுதி பெற்ற ஸ்ரீவைஷ்ணவதாஸருக்குப் பரமபதம் இப்போதே கொடுப்பது நல்லது என்று உத்ஸவ வ்யாஜத்தினாலே மங்கலகிரி ஏறி அநந்தாழ்வார் திருமாளிகை வாசலை அலங்கரித்தருளினர். அப்போது அநந்தாழ்வாரும் ஸ்ரீவைஷ்ணவ தாஸரும் வெளிப்புறப்பட்டு திருவேங்கடமுடையானை ஸேவித்துக் கை கூப்பி நிற்க, கருணைப் பெருங்கடலான எம்பெருமான் "வாரீர்!

acharya.org

ஸ்ரீவைஷ்ணவதாஸரே! உமக்கு இப்பொழுதே வீடு தந்தோம். போய்ப் பெறுவீராக! என்றருளிச்செய்தார். ஸ்ரீவைஷ்ணவதாஸரும் "ஸ்வாமின்! அடியேன் வேண்டுவது மதுவே, தேவரீருடைய திருவடித்தாமரைகளில் ரேகையாகாநின்றேன்" என்று கூறித் தண்டன் ஸமர்ப்பித்தார். எம்பெருமானும் அவருக்கு அவ்விடத்திலேயே பரமபதமளித்தார். அநந்தாழ்வாரும் எம்பெருமானின் ஔதார்யத்தை வியந்து ஸ்ரீவைஷ்ணவ தாஸருக்கு சரம கைங்கர்யங்களை நிறைவேற்றினர்.

அத்தியாயம் 4

தான் திருவனந்தாழ்வான் அம்சாவதாரரென்பதை வெளிப்படுத்தல்

ஒருகால் அநந்தாழ்வான் "ராமானுஜன்" என்னும் தன் நந்தவனத்தில் இருந்துமாயும், புஷ்பமும் பறிக்கின்ற காலத்தில் ஓர் அரவு தீண்ட, அவர் அப்போதே புஷ்கரிணியில் நீராடி கைங்கர்யத்வரையில் திருவேங்கடமுடையான் ஸந்நிதியையடைந்தார் பக்கத்திலிருந்த பாகவதர்கள் இவ்விஷயம் பற்றி ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டிருக்கையில் திருவேங்கடமுடையானும் 'வாரீர்! அநந்தாழ்வாரே! உம்மை அரவு தீண்டிற்றென்றார்களே; நீர் ஏன் விஷத்தைத் தீர்த்துக்கொள்ள முயற்சியற்றவராயிருக்கிறீரென்ன, அநந்தாழ்வாரும்" ஸ்வாமின்! அரவு தீண்டினாலும் ஸ்நாநத்தாலே சுத்தியாகா நின்றேன். மேலும் விஷம் தீர்க்கப்பட வேண்டுமென்றால் எதன் விஷம்? உள்ளேயிருக்கிற அஹங்காரமாகிய விஷமா? அல்லது பாம்பின் விஷமா? இவற்றுள் ஆத்மாவை கஷிப்பிக்கும்படியான முதல் விஷம் எல்லா ஸம்சார ரோகத்தையும் தீர்க்கும் உத்தம வைத்தியனுகிய தேவரீரைத்தவிர வேறொருவரால் நீங்காது. பின்சொன்ன பாம்பின் விஷமானது, அஹங்காரமாகிய மஹா விஷம் பொருந்திய ஸர்ப்பத்தினால் கடியுண்டவனை இருக்கும் ஆத்மாவை வெல்ல வல்லதன்று என்றார். அது கேட்ட எம்பெருமானும் "அநந்தாழ்வாரே! விஷம் தீர்க்கும் முயற்சியை விட்டு நீர் சரீரத்தை உபேக்ஷித்தீராகில் உம்மோடு சேர்ந்திருக்கையால் உண்டாகிற சந்தோஷத்தை நான் இழந்தவனாவேன்" என்றார். அது கேட்ட அநந்தாழ்வாரும், தானும் திருவனந்தாழ்வானின் அம்சாவதாரமென்பதை யெண்ணிக்கொண்டு" ஸ்வாமின்! கடித்த பாம்பு வலிதாகில் நான் விரஜா நதியில் நீராடி, எல்லாக் குற்றங்களும் நீங்கப்பெற்று, ஸ்ரீ, பூமி, நீளா, தேவிகளுடன் விளங்கும் ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் தேவரீருக்குக் கைங்கர்யம் செய்யும் பேறு பெறுவேன். கடியுண்ட பாம்பு வலிதாகில் அடியேன் திருக்கோனேரியில் நீராடிக்கொண்டு இங்கேயே அலர்மேல் மங்கையுறை மார்பரான தேவரீருக்கு கைங்கர்யம் செய்துகொண்டிருப்பேன். ஆகப் பிரிவென்பது எனக்குத் தோன்றவில்லை. தேவரீருடைய கருணை என்னும் அமுதவெள்ளத்தினால் எப்போதுமபிஷேகம் செய்யப்பெற்றுள்ள அடியேனுடைய தேகத்தை எந்த விஷமும் தீண்டவல்லதாகாது; மேலும் ஸர்வ ஸம்ஸார ரோக வைத்தியரான "தேவரீர் இருக்கும்போது நானெப்படி ஸாதாரண வைத்யனைத் தேட விரைவேன்" என்றார். பிறகு எப்போதும் போல் கைங்கர்யத்திலீடுபட்டிருந்தார்.

அத்யாயம் 5

அநந்தாழ்வாரின் மதுரகவி நிஷ்டையும் மதுரகவிதாஸ்ய நாமமும்

கட்டியம் யாதவராயன் என்ற சிற்றரசன் அநந்தாழ்வார் நியமனப்படி திருமாலை தொடுக்க உபயோகமாக ஒரு மண்டபம் கட்டிக்கொடுத்தான். அது யமுனைத்துறைவர் மண்டபம் என்று இன்றும் அழைககப்பட்டு பூமாலை தொடுக்க உபயோகப்படுததபட்டு வருகிறது.

ஒரு சமயம் யமுனைத்துறைவர் திருமண்டபத்தில் அநந்தாழ்வார் மிக ஊக்கத்துடன் மலர்மாலை தொடுத்துக்கொண்டிருக்கும்போது அவரது மனவுறுதியைப் பரீக்ஷிக்க எண்ணிய திருவேங்கடமுடையான் ஒரு அர்ச்சகர் மூலமாக அனந்தாழ்வாரை அழைத்து வரும்படி ஒரு

acharya.org

தூதனை நியமித்தருள அவன் வந்து "அநந்தாழ்வாரே! தேவரீரைத் திருவேங்கடமுடையான் அழைத்தருள்கிறார், சீக்கிரமாக எழுந்தருள வேணும் என்று விண்ணப்பம் செய்ய அநந்தாழ்வாரும் "தூதரே! உமக்கெது கெட்டது? திருவேங்கடத்தானுக் கெது கெட்டது? கருமுகை மொட்டு வெடியா நின்றது! பரிமளம் இறையா நின்றது! திருமாலை தொடுக்க முடியாமலிருக்றது. ஆகவே இப்போது வர நேரமில்லை." என்று சொல்லி எம்பெருமானுக்குத் திருமாலை தொடுப்பதிலேயே கருத்தாயிருந்தார். அத்தூதனும் திரும்பிச் சென்று அவ்வாறே விண்ணப்பிக்க திருவேங்கடமுடையானும் அனந்தாழ்வாரின் கைங்கர்யத்திலூரிய தன்மையைக் கண்டுகந்தான். பிறகு அநந்தாழ்வார் திருமாலை கட்டி முடிந்ததும் யமுனைத்துறைவர் மண்டபத்திலிருந்து திருமாலைக்கூடையை எடுத்துக்கொண்டு திருவேங்கடமுடையான் ஸன்னிதியிற்பிரவேசித்தார். அப்போது எம்பெருமான் கோபம் காட்டித் திரையை வளைத்துக் கட்டிக்கொண்டு நின்றார். அநந்தாழ்வார் திருத்திரையை நீக்கிக்கொண்டு சென்று ஸ்வாமிந்! தேவரீர் கோபத்துக்குக் காரணம் என்னவோ? என்ன, திருவேங்கடமுடையானும் வாரீர்! அநந்தாழ்வாரே! ப்ரம்ம, ருத்ராதிகளும் மீற முடியாத நம் ஆணையை மீறி உம் இஷ்டப்படி நடவா நின்றீர். இவ்வேங்கட மலையினின்றும் உம்மை விரட்டினால் என்ன செய்வீர்? உம் மாலைகளை நீரே கொண்டு போம்" என்றார். அதற்கு அநந்தாழ்வாரும் "பெருமானே! தேவரீர் ஆணையை நிறைவேற்றுவதற்காக அடியேன் இங்கு வரவில்லை. ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் தலைவரான எம்பெருமானாரின் திருவாணையின்படி தேவரீருக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்யவந்தேன். ஆசார்யன் உகந்த கைங்கர்யத்தை நிறுத்தி அபசாரப்பட வேண்டாமென்றிருந்தேன். ஸகல கல்யாண குணங்களும் பொருந்திய எம்பெருமான் ஸ்ரீவைகுண்டத்தை விட்டு ஸ்வாமி புஷ்கரிணி எனும் கோனேரியின் கரையில் அலர்மேல் மங்கையுடன் நித்யவாசம் செய்கிறான் என்றபடி தேவரீரும் இம்மலைக்கு இடைக்காலத்தில் எழுந்தருளியவரேயாவீர். தேவரீராலேயே இவ்வுலகும் மேலுலகும் எம்பெருமானார் இட்ட வழக்காக அருளப்பட்டது. அவ்வெம்பெருமானார் ஆக்ஞைப்படி இங்கு வந்து புஷ்ப கைங்கர்யத்தால் தேவரீரைச் சேவித்துக்கொண்டிருக்கிறேன். நம்மிருவருக்கும் குடி புகுதல் ஒத்திருக்கச் செய்தேயும், சிலநாள் முந்திக்கொண்ட மாத்திரத்தாலே தேவரீர் அடியேனை எப்படித் துரத்தவல்லீர்? மேலும் தேவரீர் அணிந்தாலும் இல்லையென்றாலும் அடியேனுடைய ஆசார்ய நியமனப்படி புஷ்ப கைங்கர்யம் பண்ணுகிறேன். ஆகையால் இம்மாலைகளை இங்கு வைத்துப்போகிறேன். ஸ்வாமிந்! "தேவு மற்றறியேன்" என்று ஆசார்யரான நம்மாழ்வாரையல்லாது அறியாத மதுரகவிகளின் "கண்ணிநுண் சிறுத்தாம்பை"க் கற்றதில் தேறி அதுபோலவே எம்பெருமானாருக்குத் தாஸனாக இருப்பவன் என்று அடியேனை கருதக்கடவீர்" என்று சொல்லி வேகமாக வெளியேறப் புறப்பட்டார். பிறகு திருவேங்கடமுடையானும் ஓடி வந்து அநந்தாழ்வாரைக் கையால் பிடித்து மறுபடியும் அழைத்துக்கொண்டுபோய், மாலைகளைத் தானேயணிந்து கொண்டு "அநந்தாழ்வானே! கோபப்பட வேண்டாம். உம்முடைய ஆசார்ய பக்தியையும், கைங்கர்யத்தில் நீர் வைத்திருக்கும் மனவுறுதியையும் கண்டு மிக மகிழ்ந்தோம். வரம் கேளீர்! ப்ரம்மருத்ராதிகளும் பெற முடியாத புருஷார்த்தத்தை உமக்குத் தருகிறோம்." என்றருளிச் செய்தார். அதுகேட்ட அநந்தாழ்வாரும் ஸ்வாமிந்! தேவரீர் திருவடிகளில் கைங்கர்ய மொழிய வேறொரு விருப்பமும் உண்டோ? அந்தக் கைங்கர்யமும் இப்போது செய்து கொண்டிருக்கிறேனன்றோ? இதனை தேவரீர் இடைவிடாமல் நடத்திவைக்க வேணும் என்று விண்ணப்பம் செய்தார். திருவேங்கடமுடையானும் வாரீர்! எம்பெருமானார் திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றியவர்கட்கு மோக்ஷம் கையிலேயே இருக்கின்றது. உம்மை நேராகப் பற்றினவர்கட்கும், அவ்வளவென்? உம்முடைய திருமாளிகையிலிருக்கும் ஜீவராசிகளுக்கும் கூட நாம் மோக்ஷம் தரக்கடவோம்" என்றருளினார், பின்பு ஸம்பந்த ஸம்பந்திகட்கும் வீடு பேறு உண்டாகும்படி அருளினார். அநந்தாழ்வாரும் மதுரகவியின் மனவுறுதியைப் பின்பற்றிய நமக்குத் திருவேங்கடமுடையான் ஸம்பந்த ஸம்பந்திகட்கும் மோக்ஷம் பெறுமளவுக்குப் பேரருளைப் பெறவித்தருளினான். ஆதலால் நம்மவர்கள் எல்லோருக்கும் "மதுரகவிதாஸன்" என்றே நாமமாகக் கடவது என்று கட்டளையிட்டார்.

?

அத்யாயம் 6

எம்பெருமானாரின் திருவேங்கடமுடையான் மங்களாசாஸனமும் தானுகந்த அர்ச்சா திருமேனியும்

ஒருசமயம் எம்பெருமானார் பல திவ்யதேசங்களைச் சேவித்துக்கொண்டு பேரருளாளனைச் சேவித்துப் பிறகு திருமலைக்கு விடை சொல்லுகிறேனென்ன, பேரருளாளனும் "சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை" என்று விடை கொடுத்தனுப்பினார். திருமலையடிவாரத்தில் ஆழ்வாரைச் சேவித்து அங்கேயே எழுந்தருளியிருந்தார் எம்பெருமானார். இதைக் கேள்விப்பட்ட அநந்தாழ்வார் சிஷ்யர்களுடன் மலையடிவாரத்திற்குச் சென்று எம்பெருமானாரை தெண்டன் ஸமர்ப்பித்து, திருவேங்கடமுடையானைச் சேவிக்கத் திருமலைக்கெழுந்தருளுமாறு ப்ரார்த்தித்தார். அதற்கு எம்பெருமானார் "திருவனந்தாழ்வானே மலையாக இருக்கிறபடியால் ஆழ்வார்களைப் போலவே யானும் அங்கு வரவில்லை" யென்றார். அது கேட்ட அநந்தாழ்வாரும் "இப்படியும் திருவுள்ளம் பற்றலாமோ? தாங்களும் திருமலையைவிட்டு இங்குதான் படுகாடு கிடக்கவேணும் போலுமென்ன, எம்பெருமானாரும் பெருமாள் கைங்கர்யத்துக் கிடையூறு ஏற்படுமென அஞ்சி, இதுவும் எம்பெருமான் நியமனமேயென்று கருதி திருமலைக்கெழுந்தருளினார். திருமலையிலே திருப்பரிவட்டப்பாறைக்கருகில், திருவேங்கடமுடையானின் தீர்த்தப்ரசாதங்களை திருமலைநம்பி கொண்டு வந்து ப்ரசாதிக்கப்பெற்றார். எம்பெருமானார் திருமலைநம்பியைப் பார்த்து "இதற்கு, பெரியவராகிய நீர் வரவேணுமோ" என்ன அவரும் அடியேனைவிடச் சிறியவன் ஒருவருமில்லாததாலே அடியேனே வந்தேன் என்றார்.

பிறகு எம்பெருமானார் தன் பெயராகிய "ராமானுஜன்" என்கிற ஏரியுடன் கூடிய நந்தவனத்தைக் கடாக்ஷித்து அநந்தாழ்வாரின் கைங்கர்யத்தை போரக்கொண்டாடினார். பிறகு தன் அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு திருவேங்கடமுடையானைச் சேவிக்கப் பெற்றார். சில காலம் அங்கேயே தங்கியிருந்து பகவத் கைங்கர்யங்களைச் செய்துகொண்டிருந்து, பிறகு மலையடிவாரத்திற்கு வந்து சிலகாலம் திருமலை நம்பிகளிடம் ஸ்ரீராமாயண காலக்ஷேபம் கேட்ட பிறகு நம்பியிடம் விடைபெற்றுக் கொண்டார். அங்கு அநந்தாழ்வாரின் கோரிக்கைக்கிணங்கி தன் விக்ரஹத்தைத் தானே ஆலிங்கனம் செய்து பிறகு அநந்தாழ்வாரிடம் கொடுத்தருளினார். இந்த அர்ச்சா திருமேனியே அநந்தாழ்வாரால் திருமலையில் திருவேங்கடமுடையான் ஸந்நிதிபக்கலில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு இன்றும் விளங்குகிறது. (இதற்குக் கல்வெட்டுச் சான்றும் உள்ளது. திருமலையொழுகு பக்கம் 124ல் காண்க)

அத்யாயம் 7

அநந்தாழ்வார் வேங்கடவர்க்கு மாமனாராதல்

ஒருசமயம் அநந்தாழ்வாரால் அமைக்கப்பட்ட திரு நந்தவனத்தில் வஸந்தருதுவின் ராத்திரி காலங்களில் அலர்மேல் மங்கையும், திருவேங்கடமுடையானும் இஷ்டப்படி திரிந்து ஸமஸ்தமான புஷ்பங்களையும் பழங்களையும் தாம் விரும்பினபடியே அநுபவித்து, சாத்திக்கொண்ட புஷ்பங்களை சிதறிந்தும், தாம்பூலத்தை உமிழ்ந்தும், பழக்கொட்டைகளை எறிந்தும் செய்து விகாரப்படுத்தினர். மறுநாள் காலை நிலைகுலைந்த நந்தவனத்தைக் கண்ட அநந்தாழ்வார் எந்தத் திருடன் எம்பெருமானின் இந்த நந்தவனத்தைக் கெடுத்தானோ என்று வருத்தமுற்று காவற்காரர்களை யழைத்து இரவு முழுவதும் தூங்காமல் கண் விழித்துக் காக்கும்படி பணித்தார். காவற்காரர்கள் விழிப்புடனிருந்தும் ஒருவரும் பிடிபடாமலிருக்கவும், ஆனால் மறுபடியும் பழையபடியே நந்தவனம் சீர்குலைந்து காணப்பட்டபடியாலும் தன் அந்தரங்க சிஷ்யர்களையே காவலுக்கு நியமித்தார். அவர்களுக்கும் புலப்படாமல் திவ்ய தம்பதிகள் ஸஞ்சரிக்க, நிற்க அநந்தாழ்வார் தாமே இரவு பகலாக எட்டு நாட்கள் காவலிலிருந்தார். அவருக்கும் அவர்கள் புலப்

acharya.org

படாமலிருந்தனர். அநந்தாழ்வார் மஹிமையை யாவர்க்கும் தெரியப்படுத்தும் பொருட்டு 9-ம் நாள் இரவு பெருமாளும் பிராட்டியும் ராஜதம்பதிகள் வேஷம் தரித்துக்கொண்டு கைகோத்துக் கொண்டு திரிபவர்களாய் அநந்தாழ்வார் கண்களுக்குப் புலப்பட்டனர். உடனே அநந்தாழ்வாரும் ஓடிச் சென்று அவர்களைப் பிடித்து ஒரு மரத்தடியில் கொடியால் கட்டவேணுமென்று இழுக்க ராஜா கைப்பிடியை விடுவித்துக்கொண்டு ஓடிப் போய்விட்டான். பிறகு அநந்தாழ்வார் ராஜமஹிஷியை விடாமல் மரத்தில் கட்டி நீங்கள் யார்? எவ்விடத்தீர்? ஏன் இவ்வாறு எம்பெருமான் தோட்டத்தைக் கெடுத்தீர்? ஓடிப்போன உன் கணவன் பெயர் என்ன? என்று கேட்டார். அதற்கு மஹிஷியும், வாரீர்! தகப்பனாரே! என்னை உமது பெண்ணாக நினைத்து விட்டுவிடும். நான் எந்தத் தவறும் செய்யவில்லை. நாங்கள் இம்மலையிலிருக்கும் சிற்றரசர்கள். என் கணவர் செய்தவற்றிற்கு நான் என்ன செய்யக்கூடும். பெண் என்பவள் கணவருக்குட்பட்டவள்தானே! ஸகல சாஸ்திரமும் அறிந்த தேவரே சொல்லும்! கணவன் பெயரை நான் எங்ஙனம் சொல்லுவேன்? என்றாள். அதற்கவர் 'திருடன் மனைவியே வெகு ஸாமர்த்தியமாகப் பேசுகிறாய். கள்வர் தலைவனைக் காட்டிக்கொடுத்தால் உன்னை விட்டு விடுகிறேனென்றார். அதற்கவளும் ' அவர் எங்கோ ஓடிவிட்டதற்கு நானென்ன செய்ய முடியும். பெண் பிள்ளையான என்னை விட்டுவிடும்'' என்றாள். அதற்கு அநந்தாழ்வாரும் ''ரூபவதியான உன்னை விட்டுவிட்டு அவன் எங்கே போய்விடுவான்? பொழுது விடிந்ததும் அவனை அடையாளம் கண்டுகொண்டு பிறகு உன்னை விட்டு விடுகிறேன். அதுவரையில் இச்செண்பக மரத்தடியிலேயே கட்டுண்டிருக்கக்கடவாய்'' என்றார்.

மறுநாள் காலை அர்ச்சக பரிசாரகர்கள் திருவாராதனத்திற்கு, திருவேங்கடமுடையான் ஸன்னிதிக்குச் சென்றபோது பெருமாளின் திருமார்பின்மேல் எழுந்தருளியிருக்கும் நாச்சியாரைக்காணாமையால் அதிகாரிகளிடம் தெரிவிக்க அவர்களும் இது அர்ச்சகர்களின் சூழ்ச்சியோ? என்று அவர்களை விசாரிக்க, எம்பெருமான் ஒரு அர்ச்சகர் மேல் ஆவேசித்து ''அதிகாரிகாள் இந்த அர்ச்சகர்கள் ஒன்றுமறியாதவர்கள். அவர்களை ஒன்றும் செய்ய வேண்டாம். நானும் அலர்மேல் மங்கையும் அநந்தாழ்வாரின் தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்து அவர் வெகு நாள் தேடியும் அகப்படாமலிருந்தோம். நேற்றிரவு எப்படியோ அவரிடம் அகப்பட்டுக்கொண்டு நான் மட்டும் தப்பித்துக்கொண்டுவர அலர்மேல்மங்கை பிடிபட்டு செண்பக மரத்தில் கட்டுண்டு அநந்தாழ்வாருடைய காவலில் இருக்கிறாள். ஆகவே இச்செய்தியை அநந்தாழ்வாரிடம் விண்ணப்பம் செய்து அவளை விடுவித்துக்கொண்டு வாருங்கள்'' என்று நியமித்தருளினார். அவ்வதிகாரிகளும், அர்ச்சகர்களும் ஆச்சர்யத்துடனே அநந்தாழ்வாரின் நந்தவனத்திற்குச் சென்று செண்பக மரத்தில் கட்டுண்டிருக்கும் ராஜ பத்னீ வேஷத்திலிருந்த நாச்சியாரையும் காவலிருந்த அநந்தாழ்வாரையும் கண்டு. எமபெருமான் அருளியவற்றை விண்ணப்பித்தனர். பாக்யசாலியான அநந்தாழ்வாரே! யசோதைப் பிராட்டியால் அவளுக்குக் குழந்தையாகவவதரித்த பகவான் உரலில் கட்டுண்டாற்போல உமது பக்திக்குக் கட்டுப்பட்ட நாச்சியாரும் செண்பகமரத்தில் கட்டுண்டிருப்பதைக் காணும். இப்போது திருவாராதனத்திற்காக நாச்சியாரை விடக்கடவீர். தேவரீரைத் திருவேங்கடமுடையானும் காணவிரும்புகிறார். சீக்கிரம் எழுந்தருளவேணும்'' என்று விண்ணப்பித்தனர். அது கேட்ட அநந்தாழ்வாரும் மஹாபசாரப்பட்டு விட்டோமே யென்று பயந்து நாச்சியாரைக் கட்டவிழ்த்து விட்டு ஸர்வாபசாரங்களையும் பொறுத்தருளவேணும் என்று தெண்டனிட்டு ப்ரார்த்தித்தார். அவளும் முன் சொன்னபடியே நான் உமக்குப் பெண்ணாய் இரா நின்றேன், என்று விவாகத்துக்குரிய கன்னியாகவே மாறி நின்றாள்.

அநந்தாழ்வாரும் அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு புஷ்பக்குடலையை எடுத்துக்கொண்டு அக்கன்னிகையும் அழைத்துக்கொண்டு ஸன்னிதிக்குச் சென்று திருவேங்கடமுடையான் முன் அபராதத்தைப் பொறுத்தருளுமாறு வேண்டி நின்றார். எம்பெருமானும் வாரீர்! அநந்தாழ்வாரே! உமது இந்தப் பெண்ணை எனக்குத் தாரீர். இது ''கந்யா சுல்கம்'' ஆகக்கட

வதி என்று சொல்லித் தம் திருக்கழுத்திலிருந்த ஒரு மாலையை அவருக்கணிவித்தார். அப்போது அநந்தாழ்வார் ஸமர்ப்பித்த கன்னியானவள் எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும் போதே பொன்மயமான திருமேனி தரித்துத் திருவேங்கடமுடையான் திருமார்பை அலங்கரித்தாள். அதுமுதல் நாச்சியாரை திருவேங்கடமுடையானுக்கு கந்யகா தானம் கொடுத்ததால் அவருக்கு மாமனார் ஸ்தானத்திலிருந்து ஒவ்வொரு வருடமும் திருத்தேர் மஹோத்ஸவ தினத்தில் புதிய பீதாம்பரத்தை எம்பெருமானுக்கு சமர்ப்பித்து வந்தார். இவ்வழக்கம் இன்றளவும் திருமலையில் நடந்துவருவதோடன்றி அநந்தாழ்வார் வாழி திருநாமத்திலும ''அலர்மேல்மங்கை திருவுக்கப்பனார் வாழியே'' என்றும் ''மலையில் வேங்கடவர்க்கு மாமனார் வாழியே'' என்றும் ஸேவிக்கப்பட்டு வருகின்றது.

அத்தியாயம் 8

திருவேங்கடமுடையான் — அநந்தாழ்வாரிடையே சில பரிமாற்றங்கள்.

ஒருநாள் அநந்தாழ்வார் தமது திருநந்தவனத்தில் மிகவும் நீண்டதாக வளர்ந்திருக்கும், கர்ப்பக்கிரகமெங்கும் பரிமளம் விளங்கத்தக்க குறுவேரை திருவேங்கடமுடையானுக்குச் சமர்ப்பித்தார். அப்போது எம்பெருமான் அநந்தாழ்வாரைப் பார்த்து ''அநந்தாழ்வாரே! நீர் ஸமர்ப்பித்த குறுவேரைச் சாத்திக்கொண்டு நான் எப்படியிருக்கிறேனென்று கேட்க, அதற்கு அநந்தாழ்வாரும் ஸ்வாமின்! ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தில் உள்ள ஆத்மாக்களாகிய மீன்களைப்பிடிக்க எப்போதும் நற்குணங்களாலான வலையையுடைய வலைஞனாக குறுவேரைத்தாங்கும் தேவரீரை நினைக்கிறேன். இவ்வேரும் தேவரீரது திருமேனியில்பட்ட காரணமாக முன்னைவிடச் சிறந்து விளங்குகிறது'' என்று விண்ணப்பம் செய்தார். திருவேங்கடமுடையானும் உகந்தார்.

பின்பு ஒருநாள் அநந்தாழ்வார் சிஷ்ய பரிபாலனத்தின் பொருட்டு கேரள தேசம் எழுந்தருளத் திருவுள்ளம்பற்றி, திருவேங்கடமுடையானிடம் விடைபெற்றுக்கொண்டு பல ஸ்ரீவைஷ்ணவர்களோடு புறப்பட்டுச் சென்றார். மத்யான வேளையில் பாக்குப்பட்டையில் கட்டிய ப்ரசாத மூட்டையை அவிழ்த்தபோது அதில் எறும்புகள் நிறைந்திருப்பதைக்கண்டு, ''ஸ்ரீ வைகுண்டத்தையும்விட்டு எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருவேங்கடத்தில் பல நாட்கள் செய்த புண்ணியத்தின் பலனைப் பிறந்திருக்கும் இவ்வெறும்புகள் உண்மையில் புண்ணியசாலிகளாகவே இருக்கவேண்டும். அதனாலன்றோ நம் ஆழ்வார்களும் திருமலையில் வாழ்கின்ற பேறுபெற்ற ஏதேனுமாவேனே என்று ப்ராத்தித்தார்கள் என்று எண்ணித் திரும்பவும் திருமலைக்கெழுந்தருளி அவ்வெறும்புகளை விட்டுவிட்டுத் திரும்பினார். பிறகு திருநாராயணபுரத்தெம்பெருமானை ஸேவிக்கச் சென்றார். அங்கே ''வாராய், திருவேங்கடச் செல்வனே! அடியேனை அனுக்ரஹிப்பதற்காகவே அடியேனுக்கு முன்னமே இங்கு எழுந்தருளினீர் போலும்'' என்று கூறி எம்பெருமானை ஸேவித்து மகிழ்ந்தார். இவ்வார்த்தைகளைக்கேட்ட ஸர்வ பரிஜனங்களும் பகவானை திருவேங்கடமுடையானாகவே ஸேவித்தவர்களாய் என்னே! ஆச்சர்யம்! எப்படி திருநாராயணன் திருவேங்கடமுடையானாக மாறினார். அநந்தாழ்வார் பாக்கியமே போலும் என்று கொண்டாடினார்கள். அதன் ஞாபகார்த்தமாகவே திருநாராயணனுக்கு ஒருநாள் திருவேங்கடமுடையான் சாத்துப்படியும் நடந்துவருகிறது. பிறகு அநந்தாழ்வார் யாத்திரையை முடித்துக்கொண்டு திருமலைக்கெழுந்தருளத் திரும்பினார். வழியில் வெயில் காலமாதலால் மிக்க தவிக்கப்பட்டவராய் கர்பூரவாய்க்காலையடைந்து அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு விடாய் தீர்ந்துபோவோமென்றிருந்தார். அப்போது திருவேங்கடமுடையான் தம் பக்தரான அநந்தாழ்வாரின் விடாய்தீர்க்கத் திருவுள்ளம்கொண்டு ஒரு ப்ரம்மச்சாரி வேஷந்தரித்து ததியோதனம் முதலிய ப்ரசாதங்களைக்கொண்டுவந்து அநந்தாழ்வாரிடம் ஸ்வாமின்! உமக்குண்டான ச்ரமத்தைக் கடாக்ஷித்து திருவேங்கடமுடையான் ப்ரசாதங்களைக் கொடுத்தனுப்பினார் என்று விண்ணம் செய்தான்.

அநந்தாழ்வாரும், எம்பெருமானின் ஆச்ரித காருண்யத்தைக் கொண்டாடி "ப்ரம்ம சாரியே! நீயே இந்த ப்ரசாதங்களை மற்ற ஸ்ரீவைஷ்ணவர்கட்கும் தாராய்" என்று சொல்ல அவனும் யாவருக்கும் ப்ரசாதத்தைக் கொடுத்துவிட்டுத் தானும் ஒரு கவளம் எடுத்துக் கொண்டு வாய்க்காலின் பக்கம் சென்று மறைந்துவிட்டான். அவனைக் காணாத அநந்தாழ்வார் முதலானோர் அது திருவேங்கடமுடையானாகவே இருக்கவேணுமென்று நிச்சயித்து விடாய் தீர்ந்தவளவில் திருமலைக்குச் சென்று எம்பெருமான் முன் நின்றனர். எம்பெருமானும் கையில் ததியோதன கவளத்துடன் எழுந்தருளியிருக்கக்கண்டு மிகவும் மகிழ்ச்சியுற்று எம்பெருமானின் கருணையைக் கொண்டாடினர்.

ஒருசமயம் அநந்தாழ்வார், தன் திருவடிகளையே சரணமென்று பற்றின சில தனுதிபர்களைக்கொண்டு திருவேங்கடமுடையான் ஸன்னிதியின் கோபுர மண்டபாதிகளை நிர்மாணம் செய்வித்தார். அப்போது திருமதிள் கட்டும் வழியில் தடையாக இருந்த செண்பக மரத்தை சில்பிகள் வெட்ட நினைக்க, திருமலையிலிருக்கும் சேதன, அசேதனங்கள் யாவுமே நித்யஸூரிகள் என்று நினைக்கும் அநந்தாழ்வார் மரத்தை வெட்ட அனுமதிக்கவில்லை. பிறகு அந்த வ்ருக்ஷத்தைப்பார்த்து ஸ்வாமிந்! எம்பெருமானுடைய ப்ராகாரவழியினின்றும் சற்று ஒதுங்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தார். அன்றிரவு திருவேங்கடமுடையானிடம் வேண்டிக்கொண்டு கண் வளர்ந்தார். மறுநாள் காலையில் அச்செண்பக மரம் ப்ராகார வழியைவிட்டுச் சற்று ஒதுங்கியிருந்தமைகண்டு ஆச்சரியப்பட்டு பகவானின் கருணையைப் புகழ்ந்து திருமதிளைக் கோணலில்லாமல் கட்டிமுடிக்கச் செய்தார். அதுவே செண்பக ப்ராகாரமென்று வழங்கி வருகிறது.

அத்யாயம் 9

திருவேங்கடமுடையான் அநந்தாழ்வார் திருமாளிகைக்கெழுந்தருளி ஸேவைஸாதித்தல்

ஒருநாள் அருணோதய காலத்தில் அநந்தாழ்வார் தன் சிஷ்யர்களுடன் ஸ்வாமி புஷ்கரிணிக்குச்செல்லும்போது அவருடைய உத்தரீயத்தின் ஒரு நுனியானது மரநிழலில் படுத்துக் கொண்டிருந்த ஒரு புலியின் காதில் மாட்டிக்கொண்டு, இழுத்துப்பார்த்தும் வராதுபோயிற்று. ஆயினும் அப்புலி அவர்களை ஒன்றும் செய்யாமலிருக்கவே ஆச்சர்யப்பட்ட அவர்கள் அநந்தாழ்வாரைப்பார்த்து ஸ்வாமிந்! இப்புலி மோக்ஷம்பெறவேண்டியே தேவரீர் திருவடிகளைப்பற்றி நிற்கின்றதுபோலும். அதனால்தான் தன் காதுகளோடு ஸம்பந்தப்பட்ட தேவரீருடைய உத்தரீபத்தைவிட இஷ்டப்படவில்லைபோலும். ஆதலால் அப்புலியை அனுக்ரஹிக்கவேணும் என்று ப்ரார்த்தித்தனர். அவரும் சிஷ்யர்களுடைய வார்த்தையை ஸத்யமாகவே கொண்டு ஆரியர்காள்! உங்களுடைய கடாக்ஷத்திற்குப் பாத்திரமான இப்புலி மோக்ஷம்பெறக்கடவது என்றருளினார். பிறகு உத்தரியத்தை இழுத்துக்கொண்டு நீராட்டத்திற்குச் சென்றார். அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு யாவரும் திரும்பும்போது அப்புலி மரித்திருக்கக்கண்டு ஆச்சர்யமடைந்து அப்புலிக்கு சரம கைங்கர்யங்களை நடத்தினார்கள். பிறகு அநந்தாழ்வார் திருவேங்கடமுடையானை ஸேவிக்கச் சென்றபோது எம்பெருமான் அப்புலியை அவர் முன்னே நிறுத்திவைத்து "அநந்தாழ்வாரே! தேவர்களுக்கும் துர்லபமான மோக்ஷத்தைப் புலி முதலியவைகட்கும் நீர் கொடுக்கத் தொடங்கினீராகில் இனி நமக்கிங்கென்னவேலை? நாம் போகிறோம். நீரே இங்கிருக்கக்கடவீர்" என்றருளிச்செய்தார். அதைக்கேட்ட அநந்தாழ்வாரும் எம்பெருமானே! இத்திருவேங்கடமாமலை நாம் இருவருமே குடிபுகுந்த இடம்தானேயன்றி நமக்குச் சொந்தமல்லவே! மேலும் புலிக்கு முக்தியளித்தது அடியேனுடைய தவறாக எப்படியாகும். அடியேனுடைய ஸம்பந்த ஸம்பந்திகட்கும் மோக்ஷந்தந்தேன் என்று தேவரீரே ஸாதித்திருக்கிறீரல்லவா? என்று சிரிப்புடன் கூறினார். திருவேங்கடமுடையானும் "புலிக்கு முக்தியளித்ததை யாவருக்கும் தெரியச்செய்யவே இப்படிக் கேட்டோம்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

acharya.org

ஒரு சமயம் ஜ்வரத்தால் துன்பப்படுகின்ற அநந்தாழ்வாரை க்ஷேமம் விசாரிக்கவும், வைத்தியர்களைக் கொண்டு நோய் தீர்க்கவும் எம்பெருமான் ஏகாங்கிகளை நியமித்தருள அவர்கள் அநந்தாழ்வாரிடம் சென்று சுவாமின்! தேவரீருக்கு கைங்கர்யம் செய்யவும், வைத்தியர்களைக் கொண்டு நோய் தீர்க்கவும் திருவேங்கட முடையான் அடியோங்களுக்குக் கட்டளையிட்டருளினார்" ஆகவே தேவரீர், அடியோங்கள் செய்யவேண்டியதை நியமித் தருள வேணும் என்று விண்ணப்பித்தனர். அதற்கு அநந்தாழ்வார் வாரீர்! ஏகாங்கிகாள்; திருவேங்கட முடையான் ஆளிட்டு அந்தி தொழுகிறாரோ? எவ்வளவு செல்வமுடையவனும் ஸந்தியா வந்தனத்தைப் பிறரைக் கொண்டு செய்வதாக நாம் கண்டதும் கேட்டது முண்டோ? புருஷோத்தமனான அவன் இப்படிச் செய்வது ஆச்சர்யமே! எனக்கு வைத்யர்களை அழைப்பித்துப் போக்க வேண்டிய வ்யாதி ஒன்றுமில்லை. நீங்கள் வந்த வழியே செல்லுங்கள் என்று பதிலளித்தார். ஏகாங்கிகளும் மேற்படி நடந்தவற்றை திருவேங்கடத்தெம்பெருமானிடம் விண்ணப்பம் செய்ய அவர் பரம காருணிகராதலால் விரைந்து தானே அநந்தாழ்வார் மாளிகைக் கெழுந்தருளி அவரைக் கடாக்ஷித்து க்ஷேமம் விசாரித்தருளினார். அதற்கு அநந்தாழ்வார் பதிலொன்றும் சொல்லாமலிருக்கவே எம்பெருமான் "வாரீர்! அநந்தாழ்வாரே! ஏன் பதில் சொல்லாமலிருக்கிறீர்? நான் முன்னமே வராமல் ஏகாங்கிகளை அனுப்பியதாலோ அல்லது ஜ்வரவேகத்தாலோ என்று கேட்டுத் தன் அன்றலர்ந்த செந்தாமரை போன்ற திருக்கண்களால் அவரைக் கடாக்ஷித்து, குளிர்ந்த திருக்கைகளால் அவர் திருமேனியெங்கும் தடவி அவரை ரோகமற்றவராகவும் முன்னைவிட பலமுள்ளவராகவும் செய்தருளினார். பின்பு, அநந்தாழ்வாரும், "ஸ்வாமின்! தேவரீர் எழுந்தருளியதாலன்றோ அடியேன் ஸேவிக்க முடிந்தது. நோய் நீங்கி மிகுந்த பலமும் பெற்றேன். இது தேவரீரைத் தவிர மற்றவர்களாலாமோ? அடியேன் க்ஷணகாலம் பதில் சொல்லாமலிருந்த அபராதத்திற்கு க்ஷமித்தருள வேணும். அநாதியான ஜன்மங்கள் தோறும் பாபம் ஸம்பாதிக்கும் தன்மையுள்ள அடியேனுக்கு இந்த அபராதம் புதிதன்று. ஆயினும் கல்பகோடி காலம் பாபம் செய்தவனையும் அவன் திருந்திய வளவிலே க்ஷமித்தருளும் தேவரீருக்கு அடியேனுடைய அபராதத்தைப் பொறுத்தருளல் அபூர்வமன்று. எவ்விதமாகிலும் அடியேனை க்ஷமித்தருள வேணும் என்று ப்ரார்த்தித்தார். எம்பெருமான் திருவடிகளிலே தெண்டன் ஸமர்ப்பித்தார். எம்பெருமானும் அவரை உகந்து கொண்டாடி விட்டு மறைந்தார்.

அத்தியாயம் 10

திருவேங்கட முடையான் அநந்தாழ்வார் தனியன் ஸாதித்தல்

ஒரு சமயம் திருவேங்கட முடையானைச் சேவிப்பதற்காக ஸ்ரீ ரங்கத்தினின்றும் புறப்பட்டுச் சில நாட்கள் நீண்ட வழி நடந்து திருமலையேறி வருகின்ற வரதாசாரியர் முதலான ஸ்ரீவைஷ்ணவர்கள் பசி, தாகாதிகளால் ச்ரமப்படுவதைக் கண்டு கருணைக் கடலான திருவேங்கடமுடையான், ஒரு ப்ரம்மசாரி வேஷத்தில் சித்ரான்னத்தை எடுத்துக் கொண்டு அவர்களுக்கெதிரே எழுந்தருளி ப்ரசாதத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்ட, அவர்களோ அவனை ஒரு ஸ்ரீவைஷ்ணவனென்று நிச்சயிக்காமல் ப்ரசாதம் வாங்கிக் கொள்ள ஸந்தேகம் கொண்டு நீ யார்? யாருடைய திருவடி ஸம்பந்தம் பெற்றவன்? இப்ரசாதம் எவ்விடத்தது? என்று கேட்டனர். அதற்கு அந்த ப்ரம்மசாரியும் "அடியேன் மதுரகவிதாஸன். ஒரு வழிப்போக்கர் மூலமாக தேவரீர்களின் ச்ரமத்தைக் கேள்விப்பட்ட அநந்தாழ்வார் பெருமாள் அமுது செய்த இப்ரசாதத்தை அனுப்பியருளினார். ஸந்தேகமின்றியமுது செய்தருள வேணு" மென்று ப்ரார்த்தித்தார். அதற்கவர்களும் "வாரீர் ப்ரம்மசாரியே! ஆசார்யர் தனியனைச் சொல்லும்" என்றனர். உடனே அந்த ப்ரம்மசாரியும்,

"அகிலாத்ம குணாவாஸம் அஜ்ஞான திமிராபஹம் |
ஆச்ரிதானாம்ஸுசரணம் வந்தே அநந்தார்ய தேசிகம்,"

acharya.org

என்று ஒரு தனியனை நிருமித்துச் சொன்னார். அது கேட்ட அவர்கள் இத்தனியனில் உம் பரமாசார்யரான உடையவர் ஸம்பந்தம் காணப்படவில்லையே" என்ன அவரும் ஆரியர்காள்! எங்கள் ஆசார்யருக்கு இரண்டு தனியன்கள் உண்டு. ஒன்று அவர் குணப் பெருமையைச் சொல்வது. மற்றொன்று ஆசார்ய ஸம்பந்தத்தின் பெருமையைப்பற்றியது. இரண்டாவதையும் கேட்டருளவேணும் என்று சொல்லி,

"ஸ்ரீமத் ராமானுஜாசார்ய ஸ்ரீபாதாம் போருஹத்வயம் |
ஸதுத்தமாங்க ஸந்தார்யம் அநந்தார்யம் அஹம்பஜே"

என்று மற்றுமொரு தனியனை நிருமித்துச் சொல்ல, அந்த ஸ்ரீ வைஷ்ணவர்களும் மிக்க மகிழ்வுற்று ப்ரசாதத்தைப் பெற்று அமுது செய்தனர். அவர்களின் அனுமதிபெற்றுச் சற்று முன்னதாகவே எம்பெருமானாகிய ப்ரம்மசாரி சென்று மறைந்தான். பிறகு அந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் விடாய் தீர்ந்து திருமலைக்குச் சென்று அநந்தாழ்வாரைச் சேவித்து, அவரால் நல்வரவு கூறப்பட்டவர்களாய், ஸ்வாமின்! தேவரீர் அனுப்பிய தேவரீருடைய திருவடி ஸம்பந்தம்பெற்ற மதுர கவி தாஸன் என்னும் ப்ரம்மசாரி கொண்டுவந்த ப்ரசாதத்தாலே திருப்தியடைந்து ஸுகமாகவே வருகிறோம் என்றனர். அதுகேட்ட அநந்தாழ்வார் நம் சிஷ்யனென தேவரீர்கட்கு ப்ரசாதம் கொண்டுவந்து கொடுத்த ப்ரம்மசாரி யார்? என்று நானொன்றுமறியேன். எல்லாம் பரம காருணிகனான எம்பெருமான் செயலாகவே இருக்கும். ப்ரம்மசாரியாய் எழுந்தருளியிருந்தவன் இன்னுமென்ன செய்தான்? சொல்லுங்கள் என்று கேட்டார். அவர்களும் ஸ்வாமின்! ப்ரம்மசாரி கொணர்ந்த ப்ரசாதத்தை நாங்கள் ஸ்வீகரிக்கச் சந்தேஹித்து அவரது ஆசார்ய ஸம்பந்தத்தையும், ஆசார்ய தனியனையும் கேட்டோம். அவரும் தம்மைத் தேவரீருடைய திருவடி ஸம்பந்தம்பெற்றவராகவும் மதுரகவிதாஸன் என்ற திருநாமமுடையவராகவும் சொல்லி தேவரீர் விஷயமாக இரண்டு தனியன்களையும் ஸாதித்தார். பிறகே நாங்கள் ப்ரஸாதத்தை ஸ்வீகரித்தோம் என்று சொல்லி அவ்விரண்டு தனியன்களையும் சொன்னார்கள். பிறகு அந்த ப்ரம்மசாரி அடியோங்களுக்குச் சற்று முன்னதாகவே தேவரீரிடம் வருவதாகப் புறப்பட்டார் என்றும் கூறினர். அங்கிருந்த யாவரும் ஆஹா! எம்பெருமானுக்கு அநந்தாழ்வாரிடமிருக்கும் அபிமானமென்! தன்னையும் அவருடைய சிஷ்யனாகவே ப்ரஸித்தி செய்தருளினரே யென்று கொண்டாடினர். மேலும் முதல் தனியனால், அநந்தாழ்வார் நற்குணங்கள் நிறையப் பெற்றவரென்றும் அவரே ஆசார்யரெனத் தகுந்தவரென்றும், இரண்டாவது தனியனால் நற்ற ஸிம்ஹாசனாதிபதிகள் இருக்கச்செய்தேயும் அநந்தாழ்வானையே ஸகல பாகவதர்களும் சிரஸா தரிக்கத்தக்க, எம்பெருமானாரின் திருவடியிணையென்றும் ப்ரஸித்தமாகும்படி திருவேங்கடமுடையான் அருளினன் எனபதால் அன்று முதல் திருமலையில எம்பெருமானார் திருவடிகளை அனந்தாழ்வானென்றே சொல்லக் கடவதென்றும், இத்தனியன்களை அநந்தாழ்வார் தனியன்களாக அனுஸந்தித்து வரக் கடவதென்றும் வரம்பிட்டு வைக்கப்பட்டது.

எம்பெருமானாரின் விக்ரஹப்ரதிஷ்டை

இங்ஙனம் எம்பெருமானாரது ஆணையையே நிறைவேற்றிக் கொண்டு வருகிற அநந்தாழ்வார் தனது ஆசார்யரின் திருவுள்ளப் படியே ஆழ்வார்களருளிச் செய்த திவ்யப் ரபந்தங்களைப் பாராயணம் செய்து கொண்டு திருவேங்கடமுடையான் கைங்கர்யத்தில் மகிழ்ச்சியோடு ஈடுபட்டு அவரது திருவருளுக்குப் பாத்திரமாக இருந்து வருமளவிலே ஒரு நாள், எம்பெருமானார் திருநாடடுக கெழுந்தருளினமையைக் கேள்விப்பட்டுத் துன்பக்கடலுள் மூழ்கி கைங்கர்யத்தையும் மறந்து ஆழ்ந்திருந்தார். திருவேங்கட முடையான் அநந்தாழ்வாரது பிரிவைப் பொறுமல் அர்ச்சகர் மூலமாக அவரை அழைப்பித்து வாரீர்! அநந்தாழ்வாரே! எம்பெருமானார் பரமபதித்தது காரணமாக நீர் வருந்த வேண்டாம். நாமன்றோ ஒரு பெரிய நிதியை இழந்தோம். அவருக்குப் பதிலாக அவர் ஸ்தானத்திலிருந்து உம் விருப்பங்களை நிறைவேற்றக் கடவோம். என்றருளிச் செய்து மிகவும் தேற்றினன். அநந்தாழ்வாரும் பெருமானைப்

acharya.org

பார்த்து "திருவேங்கடச் செல்வனே! எம்பெருமானார் விஷயமாக ஒரு விண்ணப்பம் செய்கிறேன். அதை நிறைவேற்றியருள வேணும். "தமஸ: பரமோதாதா சங்க சக்ர கதாதர:" என்கிறபடி தேவரீரொருவருக்கே சிறப்பான திருவாழி திருச்சங்குகளை பரம பக்தனான ஒரு சக்ரவர்த்திக்காகக் கொடுத்துவிட தேவரீரை வேறு தேவதையாக ப்ரமிக்கும் ஜனங்கள் மயக்கம் நீங்கி உண்மையை அறிந்துய்வதற்காக தேவரீரை ப்ரார்த்தித்து, மறுபடியும் சங்க சக்ரங்களைத் தரிக்கும்படி செய்தும், தேவரீர் இல்லையென்றும், நிர்குணரென்றும் நிந்தித்த புறமதத்தினரை மறுக்கவேண்டி ஸ்ரீபாஷ்யம் முதலிய க்ரந்தங்கள் செய்தும் எல்லோர்க்கும் மஹோபகாரம் செய்து ஆசார்ய ஸ்தானத்தை நன்றாக நிர்வாகம் செய்தருளிய எம்பெருமானாரின் திருக்கல்யாண குணங்களைப் பற்றியதான "ராமானுச நூற்றந்தாதி" யை தேவரீர் ஸன்னிதி திருவத்யயனோத்சவத்தில் நம் ஆழ்வார்களின் ப்ரபந்தங்களைப் போலவே தனியாக ஒருநாள் கேட்டருள வேணும். மேலும் ஆழ்வார்கள் திருமலை - ஏறி மங்களாசாசனம் பண்ணாத குறையெல்லாம் தீர, தேவரீருக்கு எம்பெருமானார் மங்களா சாசனம் ஸித்திப்பதற்காகவும் கலியுக தோஷத்தினால் மிக வளர்ந்த புற மதங்கள் நசிப்பதற்காகவும் இத்திருமலையில் அவருடைய திவ்யமங்கள விக்ரஹத்தை ப்ரதிஷ்டை செய்யும் படியும் கடாக்ஷித்தருள வேணும் என்று ப்ரார்த்தித்தார். (திருமலையொழுகு 83-ம் பக்கம் காண்க).

அதற்கு உகந்தருளி எம்பெருமானும் "அநந்தாழ்வானே! நம் விஷயமான பராங்குச, பரகாலாதிகளின் திவ்யப்ரபந்தங்களைப் போல, ராமானுச நூற்றந்தாதியையும் அத்யயனோத்சவ காலத்தில் ஒருநாள் அநுஸந்தியுங்கள். எம்பெருமானாருடைய திவ்யமங்கள விக்ரஹத்தையும் நம் ஸன்னிதியிலேயே ப்ரதிஷ்டை செய்து எழுந்தருளப் பண்ணுங்கள் என்று உத்தரம் அருளிச்செய்தார் அநந்தாழ்வாரும் அக்கட்டளைப்படியே "கண்ணிநுண் சிறுத்தாம்பு" கேட்டருளுகிற மறுநாள், "ராமானுச நூற்றந்தாதி"யைக் கேட்டருளுமாறு எம்பெருமானார் தாமே ஆலிங்கனம் செய்து கொண்டு கொடுத்தருளிய அவருடைய திவ்யமங்கள விக்ரஹத்தை ப்ரதிஷ்டை செய்வித்தார். எம்பெருமானார் திருவடி நிலை அநந்தாழ்வான் என்றழைக்கப்பட வேண்டுமென்ற கட்டளையும் நிறைவேற்றப்பட்டது.

அத்யாயம் — 11

ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணம் — அநந்தாழ்வார்படி

ஒரு சமயம் ஸ்ரீ ரங்க திவ்ய நகரிலே பட்டர் திருவடிகளையே தஞ்சமாகப் பற்றின ஒரு ஸ்ரீ வைஷ்ணவர், தம ஆசார்யரான பட்டரைச் சேவித்து ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம் என்ன? என்று கேட்டார். அதற்கு பட்டரும் இவ்விஷயத்தைப் பெரியோர்களின் திருவாக்கிலேயே வெளியிட வேணுமென்று திருவுள்ளம் பற்றி, வாரீர் ஸ்ரீ வைஷ்ணவரே! திருமலையில் எழுந்தருளியிருக்கும் அநந்தாழ்வார் ஸன்னிதியிலே சென்று அந்த லக்ஷணத்தைத் தெரிந்து கொள்ளும் என்று பணித்தார். அந்த ஸ்ரீவைஷ்ணவரும் திருமலைக்கு வந்து பட்டர் நியமனத்தாலே ஸ்ரீ வைஷ்ணவலக்ஷணம் தெரிந்து கொள்ள வந்திருப்பதாக அநந்தாழ்வார் ஸன்னிதியில் தெண்டனிட்டு விண்ணப்பித்தார். அதற்கவர் இங்கேயே சில நாட்களிரும். பின்பு ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம் அறியலாம் என்று அவரைத் திருமலையிலேயே இருக்கச் செய்தார். அவரும் ஆறு மாத காலம் தங்கியிருந்தார்.

இடை விடாமல் ததீயாராதனம் நடந்து கொண்டுவரும் அநந்தாழ்வார் திருமாளிகையில் ஒரு சமயம் ஸ்ரீவைஷ்ணவர்கள் தத்தம் தகுதிக் கேற்பத் தகுந்த இடங்களில் அமுது செய்ய எழுந்தருளும் போது அநந்தாழ்வார் பட்டரின் சிஷ்யருடைய மனதைச் சோதிப்பதற்காகவும், சேஷத்வம், பாரதந்திரியம் முதலிய ஆத்ம ஸ்வரூபத்தைப் போதிப்பதற்காகவும் முதல் கோஷ்டியில் உட்கார்ந்திருந்த பட்டரின் சிஷ்யரை ஒவ்வொரு அடுத்த கோஷ்டியிலும் உட்கார வைத்து, கடைசியில் நீர் இங்கு ஒரு கோஷ்டியிலும் உட்காரத் தகுதியுடையவரல்லர் என்று சொல்லி, பிறகு சாப்பிடலாம் என்று சொல்லியனுப்பி விட்டார். இங்ஙனம் அநந்தாழ்வார்

acharya.org

செய்தும் அந்த சிஷ்யர் ஆசார்ய நியமனப்படியே நாமிருக்க வேணும் என்று நினைத்துச் சிறிதும் வருத்தமின்றி இருந்தார். அப்படியிருந்த அவரைக் கடாக்ஷித்த அநந்தாழ்வார், நம் ஆணையைச் சிறிதும் வருத்தமின்றிப் பின்பற்றுமிவர் ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணோபதேசம் பெறத் தகுந்தவரே என்று கருதி எல்லோரும் அமுது செய்து எழுந்தருளிய பின்பு அந்த ஸ்ரீவைஷ்ணவரைத் தம்மோடு உட்கார வைத்துக் கொண்டு அமுது செய்தருளினர். பின்பு அவரிடம் அன்புடையவராய் வாரீர் ஸ்ரீவைஷ்ணவரே! தேவரீர் ஸ்ரீரங்கத்திலிருந்து இவ்விடம் எழுந்தருளி ஆறு மாதங்கள் ஆகின்றன இனி பட்டர் ஸன்னிதிக்கு விடை கொள்ளலாம். ஸ்ரீவைஷ்ணவலக்ஷணமென்பது கொக்கைப்போலிருக்கும், கோழியைப்போலிருக்கும், உப்பைப்போலிருக்கும், உம்மைப்போலிருக்கும் என்பது பெரியோர்கள் நிர்ணயித்தபடி இங்ஙனே அடியேன் சொன்னதாக பட்டர் ஸன்னிதியில் விண்ணப்பியும் அவர் தாமே விசதமாக இதை உமக்கு விளக்கியருள்வார், என்று சொல்லியனுப்பினர். அந்த சிஷ்யரும் ஸ்ரீரங்கம் சென்று பட்டரைத் தண்டன் ஸமர்ப்பித்து அநந்தாழ்வார் விஷயத்தையும் அவர் அருளிச் செய்த ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணத்தையும் விண்ணப்பித்து இதற்கு தத்பர்யம் அருளிச் செய்யவேணும் என்று ப்ரார்த்தித்தார் அவரும் வாரீர் ஸ்ரீவைஷ்ணவரே! திருமலை அநந்தாழ்வார் உபதேசித்த ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணத்தின் உட்கருத்தை உமக்குச் சொல்லுகிறேன். ஊக்கமாகக் கேளும் என்று கூறி சொல்லத் தொடங்கினர்.

கொக்கைப்போல என்பதற்கு நான்கு கருத்துக்கள் உள்ளன.

1) கொக்கானது எவ்வாறு நீர் நிறைந்த இடங்களினருகில் இருக்குமோ அவ்வாறே ஸ்ரீவைஷ்ணவனும் தீர்த்தம் நிறைந்த ப்ரதேசங்களில் இருப்பான்.

2, கொக்கு எப்படி எல்லா அவயவங்களும் வெளுத்திருக்கப் பெறுமோ அவ்வாறே ஸ்ரீவைஷ்ணவனும் உள்ளும் புறமும் தோஷமற்றுச் சுத்தமான ஸ்வபாவமுடையவனாய் விளங்குவான்.

3) கொக்கு எவ்விதம் குளக்கரையிலிருந்து கொண்டு எவ்வளவு மீன்கள் வந்தாலும் கவனியாது, தன் பசி தீர்க்கப் போதுமானதொரு பெரிய மீன் வந்தவளவிலே அதைப் பிடித்துத் தன் பசியைப் போக்கிக் கொள்ளுமோ அதைப்போலவே ஸ்ரீவைஷ்ணவன் ஸாதாரணமான மனிதர்களைக் கவனியாமல் மௌனமாக இருந்து, தனது அஞ்ஞானத்தைத் தீர்த்துக் கொள்ள ஒரு பெரியவரின் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்து அத்தகைய மகாத்மா வந்ததும் அவரைத் தன் பக்தியாலும், ச்ரத்தையாலும் வசப்படுத்தி, உயிருள்ள வரையிலும் உண்மைப் பொருள்கள் எல்லாவற்றையும் அவர் சொல்லக் கேட்டுத்தன் அறியாமையைப் போக்கிக் கொள்வான்.

4) கொக்கு சமுத்திரக் கரையிலிருந்து மழைக்காலத்தில் மின்னல், இடி முதலியவற்றுக்கஞ்சி தான் வசிக்கத்தக்க ஒரு நல்ல குளத்தையடைந்து சுகமாக இருக்குமாப் போலே ஒரு ஸ்ரீவைஷ்ணவனும் தன் உறவினரால் தான் செய்யும் பகவத் கைங்கர்யங்களுக்குக் கேடு வருமாறுல் அவ்விடத்தை விட்டு வேறிடம் சென்று, தான் இருக்கத் தகுந்ததொரு நல்ல திவ்ய தேசத்தையடைந்து கைங்கர்ய நிரதனுவான்.

கோழியைப் போல என்பதற்கு "கோழி குப்பையைக் கிளறி ஸாரங்களை எடுத்துத் தானும் உபயோகித்து அவற்றையே நல்ல ஆகாரங்களாக்கித் தன் குஞ்சுகளுக்கும் கொடுக்குமாப போலே நம்மாழ்வாரென்னும் தெய்வக் கோழியும் பல பாகங்கள் நிறைந்த வேதங்களை ஆராய்ந்து ஸாரங்களை மட்டும் எடுத்துத் தானுமனுபவித்து அவற்றையே ஸ்த்ரீ, பாலாதி பாமரர்களுமனுபவிக்கத்தக்கவைகளாய் நான்கு வேதங்களுக்கு ப்ரதிநிதிகளாய், (1) திருவிருத்தம் (2) திருவாசிரியம் (3) பெரிய திருவந்தாதி (4) திருவாய்மொழி என்னும் நான்கு திவ்ய ப்ரபந்தங்களாக, தமிழ் மொழியில் அவதரிப்பித்து, பக்தர்களுக்கு அம்ருதமாக்கி குழந்தை

3

யாக ஆளவந்தார் நாதமுனிகளிடத்து வைத்தருளினார். அந்த ஸ்ரீமந்நாதமுனிகளும் அவைகளை இனி வருங்காலத்து எல்லோருமனுபவிக்கத் தக்கவைகளாய்ச் செய்தருளினார். இங்ஙனம் ஆழ்வார் மூலமாகவவதரித்த வேதங்களையும், வேதாங்கங்களான திவ்யப்ரபந்தங்களையும் நாதமுனி, ஆளவந்தார், எம்பெருமானார் ஆகியோரால் அருளப்பட்ட ஸகல வேதாந்த ஸாரங்களான க்ரந்தங்களையும், ஸ்ரீவைஷ்ணவன் கோழியாய் ஆராய்ந்துத் தன்னைச் சேர்ந்தவர்களையுமனுபவிக்கும்படி செய்து கொண்டிருப்பான் என்பது கருத்து.

இந்த த்ருஷ்டாந்தத்தில் வேதங்களை குப்பையோடு ஒப்பிட்டது தகுமோவென்ற சங்கைக்குப் பரிஹாரமும் ஸாதித்தருளினார். இது பூர்ண உவமையன்று. வேதத்தில் சொல்லப்படாத விஷயமேயில்லை. அதற்கு அல்ப பிரயோஜன பரர், தேவதாந்தரபரர், முதலானோர்க்குரியவையான அல்பஸாரம், ஸாரம், ஸாரதரங்களைவிட்டு எம்பெருமானையே அடைய ஆசைப்படும் முமுக்ஷுகளுக்கு உபாதேயமான ஸாரதமமானவற்றை மட்டும் எடுத்துக்கொள்ளல் என்றபடி.

உப்பைப்போல என்பதற்கு: உப்பானது தன் சேர்க்கையால் வ்யஞ்ஜனாதிகளுக்கு ருசியை உண்டாக்கி நிற்கின்றதுபோல பிறவற்றின் பெருமைக்குக் காரணமாக இருந்து கொண்டு, தான் மட்டும் பெருமைக்கிடமின்றி இருக்குமாம். அவ்வாறே ஸ்ரீவைஷ்ணவனும் கைங்கர்யத்தால், பகவத் பாகவதாசார்யர்களின் திருமுகம் மலர்வதற்குக் காரணமாக இருக்கச்செய்தேயும் பிறர் தன்னைக் கொண்டாடுவதற்கு இசையமாட்டான். அதற்கு மாறாக "நான் ஒன்றும் செய்யவில்லை" என்றிருப்பான்.

உப்பு எப்படித் தன் குறைவினாலும், அதிகரித்த தன்மையாலும் உண்டான ரஸம் முதலியவற்றின் ருசியின்மை அனுபவிப்பவர்களால் தூற்றப்படும் தான் ஒன்றும் சொல்லாமலிருக்குமோ அதுபோல ஸ்ரீவைஷ்ணவனும் ஏதேனுமொரு வ்யாஜத்தை வைத்துக்கொண்டு தூஷிப்பவர்களிடத்தும் தான் ஒன்றும் சொல்லாமல் "கிருபை கூர்ந்து அடியேனுடைய தோஷங்களை எடுத்துக்காட்டினீர்களே" யென்று நன்றி பாராட்டுவான்

உப்பு எப்படி கரைந்து நாசமடைந்தாலும்கூட பதார்த்தங்களுக்கு ருசியூட்டுகின்றதோ அவ்வாறே ஸ்ரீவைஷ்ணவனும் தனக்குக்கேடு வந்தாலும், பகவத், பாகவதாச்சார்ய கைங்கர்யத்திலேயே ஊக்கமுடையவனாக இருப்பான்

இப்படி பட்டர் அநந்தாழ்வார் அருளிச் செய்த ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணத்தில் கொக்கு, கோழி, உப்பு இவற்றின் தாத்பர்யத்தை அருளிச் செய்து, பிறகு, வாரீர் ஸ்ரீவைஷ்ணவரே! உம்மைப் போல் என்றதற்கு நீர் அங்கு நடந்து கொண்ட விதத்தைச் சொன்னாலன்றி கருத்து சொல்லலாகாது. அங்கு நடந்ததைச் சொல்லும் என்றார். பிறகு நடந்தவற்றையறிந்து பின்வருமாறு கூறினார். உம்மை உபமானமாக அருளிய அநந்தாழ்வாரின் திருவுள்ளம் இதுவே; ஒரு ஸ்ரீவைஷ்ணவன் ஒரு மஹாபாகவதருடைய திருமாளிகைக்கு தீர்த்தப்ரசாதங்கள் ஸ்வீகரிக்கச் சென்றால், அவர் குறிப்பிட்ட இடத்தில் உட்கார்ந்து, அதிகமான ப்ரீதியோடு தீர்த்தப்ரசாதங்களை ஸ்வீகரிப்பான் என்பதே என்றருளிச் செய்தார். இப்படி அநந்தாழ்வார் அருளிய ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணத்தை பட்டர் நன்கு எடுத்துரைத்தார்.

அத்யாயம் 12

பட்டர் அநந்தாழ்வார் ஸமாகமம்: நஞ்ஜீயர் பட்டர் திருவடிகளில் ஆச்ரயித்தல்

ஒரு சமயம் அநந்தாழ்வார் மேல்திசையில் வாசம் செய்யும் சிஷ்ய ஜனங்கள் பலரை அனுக்ரஹிப்பதற்காக ஸஞ்சாரம் செய்தருளி சில நாள் தன் அவதார பூமியான சிறுபுத்தூரில் தம்மை ஆச்ரயித்தவர்களுக்கு தத்வார்த்தங்களை உபதேசித்துக் கொண்டு தங்கியிருந்தார்.

acharya.org

எம்பெருமானின் நியமனப்படி, பட்டர், மேல்நாட்டில் வசிக்கின்ற ஒரு பண்டிதரான வேதாந்தியை வெற்றி கொள்வதற்காக ஸ்ரீரங்கநாதனுடைய அனுமதி பெற்று, போகும் வழியில் சிறுபுத்தூரையடைந்தார். அநந்தாழ்வாரும் அவரை எதிர்கொண்டழைத்து ப்ரீதியோடு தன் திருவடிகளில் தண்டனிட்ட பராசரபட்டரை 'கூரத்தாழ்வான் குமாரன் வந்தார். ஸ்ரீவைஷ்ணவ குலமஹாராஜன் வந்தார்'' என்று கொண்டாடி தமதூருக்குள் அழைத்துக்கொண்டு போனார். பிறகு பட்டர் வேதாந்தியை வெற்றிகொள்வதற்கு அநந்தாழ்வாரையும் உடனெழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோய் வேதாந்தியை வென்று திரும்பும்போது அநந்தாழ்வாருடன் சில நாட்கள் தங்கியிருந்த பிறகு ஸ்ரீரங்கம் எழுந்தருளினார். சிலநாட்கள் கழித்து அந்த வேதாந்தி தன் பொருளைத்தன் இரு பார்யைகட்கும் கொடுத்துத் தானுமொருபாகத்தை எடுத்துக் கொண்டு, ஸன்யாசாச்ரமம் ஏற்று, பட்டரிடம் ஸமர்ப்பிப்பதற்காகச் செல்லும் வழியில் அநந்தாழ்வாரை தண்டன் ஸமர்ப்பித்தார். அநந்தாழ்வாரும் அவரைப் பார்த்து ''வாரீர் வேதாந்தியே! மிருதுவான திருமேனியுடைய நீர் இப்படி ஸந்யாசம் பெற்றுக்கொண்டதேனோ? இதனால்தானோ நீர் மோக்ஷத்தைச் சாதிப்பது? ''வேர்த்தபோது குளித்து, விடாய்த்தபோது புசித்து, பட்டர் திருவடிகளே சரணம்'' என்றிருந்தால் உம்மைப் பரமபதத்திலிருந்து தள்ளி விடுவார்களோ? நிற்க, வெள்ளம் போனபின் அணைகட்டிப் பயனென்? ''நீர் இப்போது திருமந்த்ரத்தில் பிறந்து, த்வயத்தில் வளர்ந்து த்வயைக நிஷ்டர் ஆவீர்'' (திருமந்த்ரத்தினால் ஆத்மஸ்வரூப ஞானம் பிறக்கப்பெற்று த்வயத்தினால் கைங்கர்ய ருசி வரப்பெற்று அர்த்தத்துடன் த்வயத்தைத் அநுஸந்தானம் செய்துகொண்டிருக்கக்கடவீர்) என்று ஆசீர்வதித்தார். பிறகு அவரை ஸ்ரீரங்கத்திற்கனுப்பிவிட்டுத் தானும் திருமலைக்குத் திரும்பினார். ஸ்ரீரங்கத்தில் அவர் தாம் நஞ்சீயர் என்ற ப்ரசித்தியுடன் ப்ரவசன நிஷ்டரானார்.

நிகமனம் :

அநந்தாழ்வாரும் எப்போதும்போலவே திருவேங்கடமுடையானை ஆராதித்துக்கொண்டு எழுந்தருளியிருக்குங்கால் ஒருநாள் சிஷ்யர்கள் அநந்தாழ்வாரை தண்டன் ஸமர்ப்பித்து, ஸ்வாமின்! தேவரீருடைய திருவடிகளை ஆச்ரயித்துப் பெருமைபெற்ற அடியோங்களுக்கு யாதொரு குறைவுமில்லையென்று மிகவுறுதியுடையவர்களாயிருக்கிறோம். ஆயினும் இச்சரீரம் இருக்கும்வரையில் எப்படியிருக்கவேணுமோ அவ்விதத்தை அருளிச்செய்யவேணும்'' என்று ப்ரார்த்தித்தனர். அநந்தாழ்வாரும் இங்ஙனம் அருளிச்செய்தார்.

துஷ்டர்களைச் சேருவதைவிட்டு ஆயுள் உள்ளளவும் நல்லவர்களோடு சேருவதையே கடைமுறையில் கொள்ளுங்கள். ஏனெனில் ஸத்ஸங்கமானது ''ஸதா பச்யந்தி'' என்னுமாப்போலே ச்ருதி சொல்லிய முறையிலே ப்ரம்மானுபவத்தை விளைவிக்கும். அஸத் ஸம்பந்தம் அநர்த்தத்தையே விளைவிக்கும் என்று சொல்லி சௌனக முனிவர் விருத்தாந்தத்தை எடுத்துச் சொல்லி அதில் ஒரே தாய் வயிற்றில் பிறந்த இருகிளிகளுள் ஒன்று வேடுவச்சேரியில் சேர்ந்து வேடுவர்களின் பேச்சையும், வழியையும் பின்பற்றி முனிவர்கள் வரவை ஸஹியாது கடுஞ்சொற்களால் விரட்டிற்றென்பதையும், மற்றது மஹரிஷி மண்டலியில் போய்ச் சேர்ந்தபடியால் அவர்களுடைய ஸத்வார்த்தைகளையே அனுசரித்து முனிவர்களை வரவேற்று உபசரித்தது என்பதையும் எடுத்துச் சொல்லி விளக்கினார். சிஷ்யர்களும் தெளிந்தவர்களாய், உபதேசத்தை மேற்கொண்டு ஸத்ஸங்கமே கொள்ள ப்ரதிஜ்ஞை பண்ணினார்கள்,

இப்படி அநந்தாழ்வார் திருவேங்கடமுடையானிடம் நியதமாக அன்பு பூண்டு தொண்டு செய்துவருமளவில் ஒருநாள் திருவேங்கடமுடையான் நியமனம்பெற்று திருவாடிப்பூர தினத்தன்று திருநாட்டுக்கெழுந்தருளினார்.

சைவர்கள் திருவேங்கடமுடையானைத் தங்களது தெய்வமென சொந்தம் கொண்டாடிய போது, எம்பெருமானார் அளித்த திருவாழி, திருச்சங்குகளைத் திருவேங்கடமுடையான் உகந்து ஏற்றுக்கொண்டு, சைவர்கள் அளித்த மழு, மான் ஆகியவற்றை விட்டிட்ட போது, அனந்தாழ்வார், யாவருக்கும் உண்மையை புணர்த்தும் வகையில் "ஸ்ரீ வேங்கடேச இதிஹாஸ மாலா" என்ற ஒரு நூல் எழுதினார். அந்நூல் திருமலை தேவஸ்தானத்தாராலும், திருமலை அனந்தாண் பிள்ளை ஸ்ரீ உ.வே. மஹா வித்வான் புரிசை ஸ்ரீரங்காசார்யர் ஸ்வாமியாலும் ஏற்கெனவே ஸம்ஸ்கிருதம், தெலுங்கு ஆகிய லிபிகளில் வெளியிடப்பட்டிருக்கிறது. அனந்தாழ்வார் விஷயமாக தனியன்கள், நாள்பாட்டு, வாழி திருநாமம்; திருமஞ்சன கட்டியம் ஆகியவை இங்கு வெளியிடப்படுகின்றன. இவை யாவும் பலராலும் ஸேவிக்கப்பட்டு வருகின்றன. ஸ்ரீ அனந்தாழ்வாருக்கு விக்ரகப்ரதிஷ்டையும், ஸன்னிதிகளும் ஏற்பட்டு, திருப்பதி, குணகரம்பாக்கம், குன்றப்பாக்கம்புரிசை, காஞ்சீபுரம் முதலிய இடங்களில் ஸேவிக்கப்பட்டு வருகின்றது

திருமலையில் திருவேங்கடமுடையான் ஸன்னிதியில் அனந்தாழ்வார் பெருமையை நன்குணர்த்தும் வகையில் இன்றைக்கும் நடந்துவரும் சில உத்ஸவவைபவங்கள் பின்வருவனவாகும்.

1. திருத்தோன்று மாப்பிள்ளை ஸ்தானத்திலிருக்கின்ற திருவேங்கடமுடையானுக்கு அனந்தாழ்வார் திருமாளிகைக்கெதிரில் திருத்தேரில் வேங்கடவாணன் எழுந்தருளும்போது மாமனார் ஸ்தானத்திலுள்ள அனந்தாழ்வாரே பஹுமானம் பண்ணும் க்ரமத்தில் வேஷ்டி உத்தரீயம் ஆகியவை ஸமர்ப்பிக்கப்படுகின்றன.

2 அனந்தாழ்வாரின் பிருந்தாவனத்தில் வளர்ந்திருக்கின்ற மகிழமரத்தை அனந்தாழ்வாராகவே பாவித்து இதற்காகவே திருவேங்கடமுடையானை அங்கு எழுந்தருளப் பண்ணி பரிவட்டம், ஸ்ரீ சடகோபன் ஸாதித்து வருகிறார்கள். (படம் பார்க்கவும்)

3. திருவேங்கடமுடையானின் புரட்டாசி ஏழாம் திருநாளில் பெருமாள் அப்ரதக்ஷிணமாகவே ஸன்னிதிக்கு எழுந்தருளுகிறார். இது பெருமாள் அனந்தாழ்வாரின திருநந்தவனத்தில் தேவியாரோடு உலாவும்போது அவரைத் திருடன் என்று நினைத்து அனந்தாழ்வார் துரத்திக்கொண்டு வந்தபோது பெருமாள் அப்ரதக்ஷிணமாகவே ஸன்னிதிக்கு ஓடி வந்ததைக் குறிப்பதாகும்.

(இவையாவும் "திருமலை ஒழுகு" புத்தகத்தில் விவரமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன)

இவையன்றி திருமலை, திருப்பதி ஆகிய இடங்களில் காணப்படும் பல கல்வெட்டுகளும் அனந்தாழ்வாரது பெருமையை நமக்குணர்த்துவனவாக உள்ளன,

அநந்தாழ்வார் அருளிச்செய்த விஷயங்கள்

1. ஸ்ரீராமானுஜ சதுச்லோகி
2. திருவாய்மொழித்தனியன்
3 கோதா சதுச்லோகி
4. ஸ்ரீ வேங்கடேச இதிஹாஸமாலா

அநந்தாழ்வார் விஷயமாக:—

1. தனியன்கள்
2. திருமஞ்சன கட்டியம்
3 வாழி திருநாமம்
4. நாள் பாட்டு
5. மங்களச்லோகங்கள் (தசச்லோகீ)
6. அனந்தாழ்வாரின் திருப்பேரனார் அருளிச்செய்த அனந்தார்ய அஷ்டச்லோகீ.

அழகிய மணவாளன்

ஸ்ரீரங்க நாயகி

ஜயராமானுஜ ! ரங்கதாம்நி நித்யம்

acharya.org

அயர்வறும் அமரர்கள் அதிபதி

ஜயராமானுஜ ! ஹஸ்திதாம்நி நித்யம்



திருநாராயணன்

ஜ்யராமானுஜ ! யாதவாத்ரி ச்ருங்கே

acharya.org



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

[श्रीरामानुज - चतुःश्लोकी]

[श्रीमदनन्त सूरिभिरनुगृहीता]

अनिशं भजतामनन्यभाजां चरणाम्भोरुहमादरेण पुंसाम् ।
वितरन्निभृतं विभूति मिष्टां जय रामानुज! रङ्गधाम्नि नित्यम् ॥ १ ॥

भुवि नो विमतांस्त्वदीयसूक्तिः कुलिशीभूय कुदृष्टिभिस्समेतान्
शकलीकुरुते विपश्चिदीड्या जय रामानुज! शेषशैलशृङ्गे ॥ २ ॥

श्रुतिषु स्मृतिषु प्रमाणतत्त्वं कृपयालोक्य विशुद्धया हि बुद्ध्या ।
अकृथाः स्वत एव भाष्यरत्नं जय रामानुज! हस्तिधाम्नि नित्यम् ॥ ३ ॥

जय मायिमतान्धकारभानो! जय बाह्यप्रमुखाटवीकृशानो ।
जय संश्रितसिन्धुशीतभानो! जय रामानुज! यादवाद्रिशृङ्गे ॥ ४ ॥

रामानुजचतुःश्लोकीं यः पठेन्नियतस्सदा ।
प्राप्नुयात् परमां भक्तिं यतिराजपदाब्जयोः ॥

1. ஸ்ரீராமாநுஜ சதுச்லோகீ

(ஸ்ரீ அநந்தாழ்வார் அருளிச் செய்தது)

அநிசம் பஜதா மநந்யபாஜாம்
　சரணாம்போருஹ மாதரேண பும்ஸாம் |
விதரந்நிப்ருதம் விபூதி மிஷ்டாம்
　ஜய ராமாநுஜ! ரங்க தாம்நி நித்யம் | 1 |
புவி நோ விமதாம்ஸ்த்வதீயஸூக்தி;
　குலிசீபூய - குத்ருஷ்டிபிஸ் ஸமேதாந் |

acharya.org

சகலீகுருதே விபச்சிதீட்யா
ஜய ராமாநுஜ! சேஷ சைல ச்ருங்கே |2|

ச்ருதிஷு ஸ்ம்ருதிஷு ப்ரமாணதத்வம்
க்ருபயாலோக்ய விசுத்தயா ஹி புத்த்யா |

அக்ருதாஸ் ஸ்வத ஏவ பாஷ்யரத்நம்
ஜய ராமாநுஜ! ஹஸ்திதாம்நி நித்யம் |3|

ஜய மாயி மதாந்தகார பாநோ!
ஜய பாஹ்ய ப்ரமுகாடவீ க்ருசாநோ! |

ஜய ஸம்ச்ரித ஸிந்து சீத பாநோ |
ஜய ராமாநுஜ! யாதவாத்ரி ச்ருங்கே |4||

ராமாநுஜ சதுச்லோகீம் ய: படேந் நியதஸ்ஸதா |
ப்ராப்நுயாத் பரமாம் பக்திம் யதிராஜபதாப்ஜயோ: ||

2. திருவாய்மொழித் தனியன் :

ஏய்ந்த பெருங்கீர்த்தி இராமாநுச முனிதன்
வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்,
ஆய்ந்த பெருஞ்சீரார் சடகோபன் — செந்தமிழ்
வேதந்தரிக்கும் பேராதவுள்ளம் பெற

3. கோதாதேவி விஷயமாக அருளிச்செய்துள்ள கோதா சதுஸ்லோகீ

(ப்ராதக்காலத்திலும், ததீயாராதன காலத்திலுமனு ஸந்திப்பது.)

श्री अनन्तसूरि विरचिता गोदा चतुःश्लोकी

चक्रे गोदा चतुःश्लोकीं यो वेदान्त प्रगर्भिताम् ।
श्रीवेंकटेश सद्भक्तं तमनन्तगुरुं भजे ॥

சக்ரே கோதா சதுஸ்லோகீம் யோ வேதாந்த ப்ரகர்பிதாம் |
ஸ்ரீ வேங்கடேச ஸத்பக்தம் தமனந்த குரும் பஜே ||

नित्याभूषा निगमशिरसां निस्समोत्तुङ्गवार्ता
कान्तो यस्याः कचविलुलितैः कामुको माल्यरत्नैः ।
सूक्त्या यस्याः श्रुति सुभगया सुप्रभाता धरित्री
सैषा देवी सकलजननी सिञ्चतां मामपाङ्गैः ॥ (1)

நித்யா பூஷா நிகம சிரஸாம் நிஸ்ஸமோத்துங்க வார்த்தா
காந்தோ யஸ்யா: கசவிலுலிதை: காமுகோ மால்யரத்நை:
ஸூக்த்யா யஸ்யா: ச்ருதிஸுபகயா ஸுப்ரபாதா தரித்ரீ
ஸைஷா தேவீ ஸகல ஜநநீ ஸிஞ்சதாம் மாமபாங்கை: || (1)

माता चेत्तुलसी पितायदि तव श्रीविष्णुचित्तो महान्
भ्राता चेद्यतिशेखरः प्रियतमः श्रीरङ्गधामा यदि ।
ज्ञातारस्तनयास्त्वदुक्तिसरसस्तन्येन संवर्धिताः
गोदे देवि कथं त्वमन्य सुलभा साधारणा श्रीरसि ॥ (2)

மாதா சேத்துலஸீ பிதாயதிதவ ஸ்ரீவிஷ்ணுசித்தோ மஹான்
ப்ராதா சேத்யதி சேகர; ப்ரியதம; ஸ்ரீரங்க தாமாயதி
ஞாதாரஸ்தனயாஸ்த்வதுக்திஸரஸ ஸ்தன்யேன ஸம்வர்த்திதா;
கோதா தேவி கதம் த்வமன்ய ஸுலபா ஸாதாரணா ஸ்ரீரஸி.

कल्पादौ हरिणास्वयं जनहितं दृष्ट्वैव सर्वात्मनां
प्रोक्तं स्वस्य च कीर्तनं प्रपदनं स्वस्मै प्रसूनार्पणम् ।
सर्वेषां प्रकटं विधातुमनिशं श्रीधन्विनव्ये पुरे
जातां वैदिकविष्णुचित्ततनयां गोदामुदारां स्तुमः ॥ (3)

கல்பாதௌ ஹரிணாஸ்வயம் ஜநஹிதம் த்ருஷ்ட்வேவ ஸர்வாத்மனாம்
ப்ரோக்தம் ஸ்வஸ்யச கீர்த்தனம் ப்ரபதனம் ஸ்வஸ்மை ப்ரஸூனார்ப்பணம்
ஸர்வேஷாம் ப்ரகடம் விதாதுமனிசம் ஸ்ரீதன்வி நவ்யேபுரே
ஜாதாம் வைதிக விஷ்ணுசித்த தனயாம் கோதா முதாராம் ஸ்தும:

आकूतस्य परिष्क्रियामनुपमामासेचनं चक्षुषोः
आनन्दस्य परंपरा मनुगुणां आरामशैलेशितुः ।
तद्दोर्मध्यकिरीट कोटिघटित स्वोच्छिष्ट कस्तूरिका
माल्यामोद समेधितात्मविभवां गोदामुदारां स्तुमः ॥ (4)

ஆகூதஸ்ய பரிஷ்க்ரியாமநுபமா மாஸேசநம் சக்ஷுஷோ:
ஆநந்தஸ்ய பரம்பரா மநுகுணம் ஆராமசைலேசிது:
தத்தோர் மத்ய கிரீடகோடிகடித ஸ்வோச்சிஷ்ட கஸ்தூரிகா
மால்யா மோத ஸமேதிதாத்மவிபவாம் கோதாமுதாராம் ஸ்தும: ॥

स्वोच्छिष्ट मालिकाबन्ध गन्धबन्धुरजिष्णवे ।
विष्णुचित्त तनूजायै गोदायै नित्यमंगलम् ॥

ஸ்வோச்சிஷ்ட மாலிகாபந்த கந்த பந்துர ஜிஷ்ணவே
விஷ்ணுசித்த தநூஜாயை கோதாயை நித்ய மங்களம்.

मादृशाकिंचनत्राणबद्धकंकणपाणये ।
विष्णुचित्ततनूजायै गोदायै नित्यमंगलम् ॥

மாத்ருசா கிஞ்சன த்ராண பத்த கங்கணபாணயே
விஷ்ணுசித்த தநூஜாயை கோதாயைநித்யமங்களம்.

acharya.org

திருமலை அநந்தாழ்வார் திருமஞ்சனக் கட்டியம்

ஜயவிஜயீபவ ! நாயந்தே ! நாயந்தே :
ஸ்ரீமத் ராமாநுஜார்ய ப்ரியதமம் அநகம் தத்கடாக்ஷைகபாத்ரம்
தத் திவ்யாஜ்ஞாநுஸாராத் அதிவ்ருஷ பகிரி ப்ராப்த கைங்கர்ய ராஜ்யம்
அஜ்ஞானத்வாந்த பாநும் புருஷவர இதி ஸ்ரீயதீந்த்ரோக்திஸித்த
ப்ரக்யாதிம் ஸேவிஷீய ப்ரதிதகுணம் அநந்தார்ய மாசார்யவர்யம். ॥

1. சித்திரையில் சித்திரைநாள் சிறக்கவந்த பெருமாள்
சீராருமெதிராசரடி பணியும் பெருமாள்.

பத்தியுடன் வேங்கடவர்க் கடிமை செய்த பெருமாள்
பாரோர்கள் தாமுய்ய வந்துதித்த பெருமாள்

நித்தியமு மத்தாணிச்சேவை செய்த பெருமாள்
நிரந்தரமுமடியாரை வாழ்வித்த பெருமாள்

எத்திசையும் புகழோங்கி விளங்கநின்ற பெருமாள்
எம்பெருமா னடியிணைகள் இறைஞ்சி நின்ற பெருமாள்

2. யதிராசர் பதவிணையை யடைந்துய்ந்த வாரியர்க்குள்
சதிரான புகழ்பெற்றுச் சகமெங்கும் விளங்கி நின்றோய் !

எழுசிகர வேங்கடத்தே ஒழிவிலாக் காலமெல்லாம்
வழுவிலாவடிமைகள் செய்துநின்று புகழ்பெற்றோய்

துதிசெய்து துவளில்லாத் தூமலர்கள் கொண்டு — திரு
வேங்கடமால் திருவுள்ளமுகக்க நின்ற பெரும்புகழோய்

தூய புகழ்ச் சடகோபர் நாதமுனி யாளவந்தார்
தூயமொழி மாலைகளால் துலங்க நின்ற நாவுடையோய்

யதிவரனார் தரிசனமே இவ்வுலகி லெஞ்ஞான்றும்
அதிசயமாய்த் தழைத்தோங்கவருள் செய்த வருங்கலமே

எத்திசையும் ஓங்கு புகழாழ் வார்களருந் தமிழ் நூல்
நித்தியமும் சிந்தைதன்னில் நிலவநின்ற நிறை புகழோய்.

மதியிலா மானிடரும் மாதவன்தாள் மலரேத்தி
சதிருடனே வாழ்கவென்று சொல்ல முதிந்தருள் வோய்.

மாயாதவகவிருளும் மாய்ந்திடவே வந்துதித்த
மாஞானி யநந்தாழ்வான் மஞ்சனம் கொண்டருளுகவே !

வாழி திருநாமம்

மலையில் வேங்கடவர்க்கு மாமனார் வாழியே !
மணிச் சுடர்கொள் அநந்தனென இங்குதித்தோன் வாழியே !
உலகுக்கோர் தஞ்சமென உதித்தருள்வோன் வாழியே !
உலகமுண்ட மாலடிமை உகந்தருள்வோன் வாழியே !
இலகு சித்திரையில் சித்திரையோன் வாழியே.!
எந்தை எதிராசர் இணையடியோன் வாழியே !
அலர்மேல் மங்கை திருவுக் கப்பனார் வாழியே !
அநந்தாழ்வார் திருவடிகள் அனவரதம் வாழியே !

நாள் பாட்டு

திருவளர் வேங்கட மாமலையார்க்கு சிறு தொழில் செய்தவர் நாள் !
தேவிதனக்கருள் வேங்கட மன்னவன் மட்புட்டில் சுமப்பவர் நாள் !
மருமலர் சோலை மகிழ்ந்திட அம்மலை மன்னி அமர்ந்தவர் நாள் !
மன்னரவின் பூதாரவன் மாமலர் மெல்லடி யாயவர் நாள் !
வருபொழில் பணி தீண்டிடவும் வாடுதலின்றி யிருந்தவர் நாள் !
வாரிதி சூழ் வைணவர் ஆரியர் மத்தியில் ஆண்மகன் ஆயவர் நாள் !
அருமறை உட்பொருள் ஆழ்ந்திடு வைணவ இலக்கணம் சொன்னவர் நாள் !
அனைவர்களும் புகழ் சித்திரையில் கிளர் சித்திரை எனும் நாளே !

acharya.org

अनन्तार्य मङ्गल दश श्लोकी

श्री गिरिग्रामा नन्तार्यकुमार वरदाचार्य प्रणीता

அநந்தார்ய மங்கள தசச்லோகீ

श्रीवेङ्कटाद्रिकमितुः कैङ्कर्यपुन्ययुङ्क्त यम् ।
रामानुजार्यस्तस्मै स्यात् अनन्तार्यायि मंगलम् ॥ (1)

ஸ்ரீ வேங்கடாத்ரிகமிது: கைங்கர்யேஷ்வ்யயுங்க்தயம் |
ராமாநுஜார்யஸ் தஸ்மைஸ்யாத் அநந்தார்யாய மங்களம் ॥

विजयाब्दे चैत्रमासे चित्रायां भृगुवासरे ।
योजज्ञे केशवाचार्यात् अनन्तार्यायि मंगलम् ॥ (2)

விஜயாப்தே சைத்ர மாஸே சித்ராயாம் ப்ருகுவாஸரே |
யோ ஜஜ்ஞே கேசவாசார்யாத் அநந்தார்யாய மங்களம் ॥

प्राकारगोपुरारामान् तटाकं मण्डपादिकम् ।
ततानयो वेङ्कटाद्रौ अनन्तार्यायि मङ्गलम् ॥ (3)

ப்ராகாரகோபுராராமாந் தடாகம் மண்டபாதிகம் |
ததாந யோ வேங்கடாத்ரௌ அநந்தார்யாய மங்களம் ॥

श्रीकृष्णद्वय लोकार्य प्रमुखाःस्वीयसूक्तिषु ।
प्रमाणयन्ति यत्सूक्तीः अनन्तार्यायि मंगलम् ॥ (4)

ஸ்ரீ க்ருஷ்ணத்வய லோகார்ய ப்ரமுகாஸ் ஸ்வீயஸூக்திஷு |
ப்ரமாணயந்தி யத்ஸூக்தீ: அநந்தார்யாய மங்களம் ॥

प्राह भट्टार्य शिष्याय यः श्रीवैष्णवलक्षणम् ।
उदाहरन् सैन्धवादीन् अनन्तार्यायि मंगलम् ॥ (5)

ப்ராஹ பட்டார்ய சிஷ்யாய ய: ஸ்ரீவைஷ்ணவலக்ஷணம் |
உதாஹரந் ஸைந்தவாதீந் அநந்தார்யாய மங்களம் ॥

कस्तवार्य इति श्रीशः वरदार्यायि पृच्छते ।
प्राह यद्विषयौ मन्त्रौ अनन्तार्यायि मंगलम् ॥ (6)

கஸ்தவார்ய இதி ஸ்ரீச: வரதார்யாய ப்ருச்சதே |
ப்ராஹ யத்விஷயௌ மந்த்ரௌ அநந்தார்யாய மங்களம் ॥

श्रीवेङ्कटेशविधृत दिव्यस्रग्वासितोरसे ।
कुर्वते सर्व कैंकर्य मनन्तार्यायि मंगलम् ॥ (7)

ஸ்ரீவேங்கடேச வித்ருத திவ்யஸ்ரக்வாஸிதோரஸே |
குர்வதே ஸர்வ கைங்கர்யம் அநந்தார்யாய மங்களம் ॥

acharya.org

सद्भिश्शिरोभिर्धार्याय यतिराड्पादुकात्मने ।
सर्वात्मगुण पूर्णायास्त्वनन्तार्याय मंगलम् ॥ (8)

ஸத்பிஶ் ஶிரோபிர் தார்யாய யதிராட் பாதுகாத்மநே |
ஸர்வாத்ம குணபூர்ணாயாஸ்த் வநந்தார்யாய மங்களம் ||

भोगिदष्टंकरं योऽसौ निर्णिज्यकुसुमोत्करैः ।
श्रीशमानर्च तस्मैस्यात् अनन्तार्याय मंगलम् ॥ (9)

போகிதஷ்டம் கரம் யோஸௌ நிர்ணிஜ்ய குஸுமோத்கரை: |
ஸ்ரீஶமாநர்ச்ச தஸ்மை ஸ்யாத் அநந்தார்யாய மங்களம் ||

सर्वगन्धइति ख्यातः श्रुत्यन्ते वेङ्कटेश्वरः ।
यत्समर्पितमाल्यौघैः अनन्तार्याय मंगलम् ॥ (10)

ஸர்வகந்த இதி க்யாத: ச்ருத்யந்தே வேங்கடேச்வர: |
யத்ஸமர்ப்பித மால்யௌகை: அநந்தார்யாய மங்களம் ।

श्रीमदनन्तार्य कुमार रामानुजार्यपुत्र नारायणार्य प्रणीता श्रीमदनन्तार्य विषया अष्टश्लोकी

ஸ்ரீமதநந்தார்ய குமார ராமாநுஜார்ய புத்ர நாராயணார்ய ப்ரணீதா ஸ்ரீமதநந்தார்ய அஷ்டச்லோகீ

वन्देऽनन्तगुरूत्तंस वंशमुक्ताफलात्मनः ।
रामानुजार्यस्यसुतं श्रीनारायणदेशिकम् ॥

வந்தேநந்த குரூத்தம்ஸ வம்சமுக்தாபலாத்மந: |
ராமாநுஜார்யஸ்ய ஸுதம் ஸ்ரீநாராயணதேசிகம் ||

श्रीरामावरजे मुनौ शठरिपोर्गाथाविशेषार्थदे
शिष्यान् प्रेक्ष्य भवत्सु वेंकटपतेःकःकिंकरस्स्यादिति ।
प्रश्नं कुर्वति तेषु मौनिषुच यो बद्धाञ्जलिः प्रार्थयन्
प्रापश्रीनिधिकिंकरत्वमनघंतं शेष सूरिं भजे ॥ (1)

ஸ்ரீராமாவரஜே முநௌ சடரிபோர்காதா விசேஷார்த்ததே
சிஷ்யாந் ப்ரேக்ஷ்ய பவத்ஸு வேங்கடபதேர் க: கிங்கரஸ்ஸ்யாதிதி |
ப்ரச்நம் குர்வதி தேஷு மௌநிஷு சயோ பத்தாஞ்ஜலி: ப்ரார்த்தயந்,
ப்ராப ஸ்ரீநிதிகிங்கரத்வமநகம் தம் சேஷஸூரிம் பஜே ||

acharya.org

श्रीरंगाद्वृषभाचलं प्रचलितेष्वार्येषु भोज्यार्थिषु
श्रान्तेष्वध्वनि वेंकटाचलपतिः चित्रान्न पात्रं वहन्।
पृष्टस्तैरिति को भवान् कुत इदं यःशिष्यभावं वदन्
पद्येयद्विषये बभाण फणिराट् सूर्युत्तमं तं भजे ॥ (2)

ஸ்ரீரங்காத்வ்ருஷபாசலம் ப்ரசலிதேஷ்வார்யேஷு போஜ்யார்த்திஷு,
ச்ராந்தேஷ்வத்வனி வேங்கடா சலபதி: சித்ராந்நபாத்ரம் வஹந் |
ப்ருஷ்டஸ் தைரிதி கோபவாந் குத இதம் யச்சிஷ்ய பாவம்வதந்
பத்யே யத்விஷயே பபாண பணிராட் ஸூர்யுத்தமம் தம் பஜே ||

स्नातुं स्वामिसरोवरं प्रति चलन् शेषार्यवर्यःपथि
व्याघ्रे चेल दशाञ्चल स्पृशि ततः शिष्येषुमुक्त्यर्थिषु।
भूयादेवमितिब्रुवन् पुनरपि स्नात्वेत्य पश्यन् मृतं
दीप्तं वेंकटनायकांघ्रिकमले हृष्टोऽस्तुनः श्रेयसे॥ (3)

ஸ்நாதும் ஸ்வாமி ஸரோவரம் ப்ரதி சலந் சேஷார்ய வர்ய : பதி
வ்யாக்ரே சேலத சாஞ்சலஸ்ப்ருசி தத: சிஷ்யேஷு முக்த்யர்த்திஷு |
பூயாதேவமிதிப்ருவந் புனரபிஸ்நாத்வைத்ய பச்யந் ம்ருதம்,
தீப்தம் வேங்கடநாய காங்க்ரிகமலே ஹ்ருஷ்டோஸ்து நச்ச்ரேயஸே | |

तिष्ठन् शेषगुरो ममैवहिगिरौ मुक्तिं परैर्दुर्लभां
व्याघ्रादेश्च ददाति चेदपि भवान् किंमेऽत्र यास्याम्यहम्।
इत्युक्तश्च वृषाद्रिराजपतिनाऽनन्तार्य चूडामणिः
मत्तः श्रैष्ठ्यमिदं तवात्र न परं सताह....इत्यब्रवीत् ॥ (4)

திஷ்டந் சேஷகுரோ மமைவ ஹிகுரௌ முக்திம் பரைர் துர்லபாம்,
வ்யாக்ராதேச்ச ததாதிசேதபி பவாந் கிம்மேத்ர யாஸ்யாம்யஹம் |
இத்யுக்தச்ச வ்ருஷாத்ரி ராஜபதிநா நந்தார்ய சூடாமணி:, மத்த: ச்ரைஷ்ட்யமிதம்
தவாத்ர நபரம் ஸப்தாஹ இத்யப்ரவீத் ||

यास्यन् केरलसंज्ञकंजनपदं पाथेयबन्धं पथि
स्नात्वाऽऽराध्य जगद्गुरुं तदनु यो भोक्तुंविविच्यादरात्।
दृष्ट्वा तत्रपिपीलिका इति मया नान्यत्र नेया इमाः
शेषाद्रिं पुनरेत्य ताश्चमुमुचे नन्तास्म्यनन्तं गुरुम् (5)

யாஸ்யங்கேரளஸம்ஜ்ஞகம் ஜநபதம் பாதேய பந்தம்பதி,
ஸ்நாத்வாராத்த்ய ஜகத்குரும்ததநுயோ போக்தும் விவிச்யாதராத் |
த்ருஷ்ட்வா தத்ரபிபீலிகா இதிமயா நாந்யத்ரநேயா : இமா:,
சேஷாத்ரிம் புநரேத்ய தாச்சமுமுசே நந்தாஸ்ம்யநந்தம் குரும் ||

acharya.org

श्रीमच्चंपक जातिकुन्दकुट्जा द्युत्फुल्ल पुष्पाकरे
यस्योद्यानवरे परस्स भगवान् श्रीवेंकटेशो निशि ।
त्यक्त्वानन्दविमानमन्वहमहो लक्ष्म्यासहारंस्त ह।
तस्मै शेषगुरूत्तमायसततं कुर्यां नमस्संततिम् ॥ (6)

ஸ்ரீமச்சம்பக ஜாதி குந்தகுட ஜாத்யுத்.புல்ல புஷ்பாகரே,
யஸ்யோத்யாநவரே பரஸ்ஸபகவாந் ஸ்ரீவேங்கடேசோநிசி |
த்யக்த் வாநந்தவிமான மந்வஹமஹோ லக்ஷ்ம்யாஸஹாரம்ஸ்தஹா,
தஸ்மைசேஷ குருத்தமாய ஸததம் குர்யாம் நமஸ்ஸந்ததிம் ॥

श्रीमद्वेंकटनायकप्रियतमा वात्सल्यसीमा रमा
निश्युद्यान लतान्तकेलिसमये त्रस्तातिभीतेव सा ।
सप्रेमस्मितमाह मुग्धमधुरं भोस्तात तातेति यं
तं वन्दे गुरुमौलि शेखरमहं शेषार्यवर्यं सदा ॥ (7)

ஸ்ரீமத் வேங்கடநாயக ப்ரியதமா வாத்ஸல்ய ஸீமா ரமா,
நிச்யுத்யான லதாந்த கேளிஸமயே த்ரஸ்தாதி பீதேவஸா |
ஸப்ரேமஸ்மிதமாஹ முக்தமதுரம் போஸ்தாத தாதேதியம்,
தம்வந்தே குருமௌலி சேகரமஹம் சேஷார்யவர்யம் ஸதா ॥

कन्याकक्षकरात्त पुष्पपिटकं काल्यागतं श्रीनिधिः
मह्यं देहि तवात्मजामिति भृशं यं प्रार्थ्यलेभे नतः ।
कन्याशुल्कमितीव सस्पृहतरं प्रोद्धृत्यकण्ठान्निजात्
मालां यस्य गलेऽर्पयन् तमनिशं शेषार्यवर्यं श्रये ॥ (8)

கந்யாகக்ஷகராத்த புஷ்பபிடகம் கால்யாகதம் ஸ்ரீநிதிம்:,
மஹ்யம் தேஹி தவாத்மஜா மிதிப்ருசம் யம்ப்ரார்த்யலேபே நத: |
கன்யாசுல்க மிதீவ ஸஸ்ப்ருஹதரம் ப்ரோத் த்ருத்ய கண்டாந்நிஜாத்
மாலாம்யஸ்ய களேர்ப்பயந் தமநிசம் சேஷார்யவர்யம் ச்ரயே ॥

श्रीमद्रामानुजाचार्य पुत्र नारायणोदितम् ।
कलयन्तु सदा सन्तोऽनन्तार्याष्टक मादरात् ॥

ஸ்ரீமத்ராமா நுஜா சார்ய புத்ர நாராயணோ திதம் |
கலயந்து ஸதாஸந்தோ நந்தார்யாஷ்டக மாதராத் ॥

ஸ்ரீ:

[தனியன்கள்]

अखिलात्मगुणावासम ज्ञानतिमिरापहम् ।
आश्रितानां सुशरणं वन्देऽनन्तार्यदेशिकम् ॥ (1)

அகிலாத்ம குணாவாஸம் அஜ்ஞான திமிராபஹம் |
ஆச்ரிதாநாம் ஸுசரணம் வந்தே நந்தார்ய தேசிகம் ||

श्रीमद्रामानुजाचार्य श्रीपादांभोरुहद्वयम् ।
सदुत्तमाङ्गसन्धार्यमनन्तार्यमहं भजे ॥ (2)

ஸ்ரீமத் ராமாநுஜாசார்ய ஸ்ரீபாதாம்போருஹ த்வயம் |
ஸதுத்தமாங்கஸந்தார்யம் அநந்தார்ய மஹம்பஜே ।

आम्नायवाचामपि मृग्यभूमा. श्रीवेङ्कटक्ष्माधर दिव्यधामा ।
देवोऽनुधावन् प्रददाति यस्मै, स्रजं भजेऽनन्तगुरुं तमार्यम् ॥ (3)

ஆம்நாயவாசாமபி ம்ருக்யபூமா, ஸ்ரீவேங்கட க்ஷ்மாதர திவ்யதாமா |
தேவோநு தாவந் ப்ரததாதியஸ்மை, ஸ்ரஜம் பஜேநந்தகுரும்தமார்யம் ||

यतीन्द्रपादांबुज चंचरीकं, श्रीमद्दयापालदयैकपात्रम् ।
श्रीवेङ्कटेशांघ्रि युगान्तरंगं, नमाम्यनन्तार्य मनन्तकृत्वः ॥ (4)

யதீந்த்ரபாதாம்புஜ சஞ்சரீகம், ஸ்ரீமத்தயா பால தயைகபாத்ரம் |
ஸ்ரீவேங்கடேசாங்க்ரி யுகாந்தரங்கம், நமாம்யநந்தார்ய மாநந்தக்ருத்வ : ||

जायासहाय खननीय महा तटाक मृद्भारवाहि वटु वेषवृषाचलेन्द्रम् ।
श्रीवेङ्कटेशधृतदत्त मनोज्ञगन्ध स्रग्गन्धिकन्धरमनन्तगुरुं प्रपद्ये ॥ (5)

ஜாயாஸஹாய கனீய மஹாதடாக, ம்ருத்பாரவாஹிவ டுவேஷவ்ருஷாசலேந்த்ரம் |
ஸ்ரீவேங்கடேசத்ருததத்த மநோஜ்ஞ கந்த, ஸ்ரக்கந்திகந்தரம நந்தகுரும் ப்ரபத்யே ||

श्रीवेङ्कटेशशिरस्स्वयमाननिर्यत्सौरभ्य गुम्भि सुमनोभिरनन्यबुद्ध्या ।
आह्लादयन्निज घनोपवनोदिताभिः श्रीमाननन्तगुरुरन्वह माविरास्ताम् (6)

ஸ்ரீ வேங்கடேச மசிரஸ் மயமாநநிர்யத் ஸௌரப்யகும்பி ஸுமனோபிரநந்ய புத்த்யா |
ஆஹ்லாதயந்நிஜத நோபவநோதிதாபி: ஸ்ரீமாநநந்தகுருரந்வஹ மாவிராஸ்தாம் ||

ஸர்வகந்த இதிக்யாத : ச்ருத்யந்தே வேங்கடேச்வர : |
யத்ஸமர்ப்பிதமால் யௌகை : அநந்தார்யாய மங்களம் ||

acharya.org



திருமலையப்பர்
(எம்பெருமானார் பிரதிஷ்டை செய்வித்தது)

எம்பெருமானார் திருமலை)
எம்பெருமானாரின் ஜீவிய காலத்தில் அவரது அனுமதியுடன்
அநந்தாழ்வார் பிரதிஷ்டை செய்வித்தது. திருவடி நிலை
அநந்தாழ்வான் எனும் திருநாமத்துடன்,

acharya.org

அயர்வறும் அமரர்கள் அதிபதி
சுடரடி தொழுதெழென் மனனே

நம்மாழ்வார் — காஞ்சீபுரம்

மதுரகவிகளும்—அநந்தாழ்வாரும்
(திருப்பதி)

acharya.org



↑

அநந்தாழ்வார்
திருமாளிகை
—திருமலை

←

திருமலையில்
அநந்தாழ்வார்
ப்ருந்தாவனம்
—மகிழமரம்

↓

அருளாளப்பெருமாள் எம்பெருமானார்
காஞ்சீபுரம்

acharya.org

அநந்தாழ்வாருக்கு அநந்தாழ்வார் ப்ருந்தாவனத்தில்
திருவேங்கடமுடையான் எழுந்தருளி மரியாதை
—ஸ்ரீசடகோபன் ஸாதித்தருளல்

ஸ்ரீ அநந்தாழ்வார்
—புரிசை

←

குன்றப்பாக்கம்

ஸ்ரீ அநந்தாழ்வார்

→

காஞ்சிபுரம்

acharya.org

Srimathe Ramanujaya namah : Srimathananatharaya Maha Gurave namah :

THIRUMALAI ANANTHALVAN

SOME HISTORICAL GLEANINGS

By Dr. K. V. RAMAN
(Professor and Head of Dept. of the Archaeology, University of Madras.)

In the Sri Vaishnava Sampradaya, KAINKARYA or PHYSICAL SERVICE to the Lord in the ARCHA form is given prime importance. Whenever we think of the important Sri-Vaishnava temples, we also think of many Sri Vaishnava preceptors who were closely associated with those temples by way of their deep attachment and physical service. Thus, the very mention of Srivilliputtur brings to our mind the great service rendered by PERIALVAR in tending the Flower garden and supplying flowers daily to the temple. Again, Thondaradippodi Alvar at Srirangam; Thirukachi nambi's fanning service to Perarulala at Kanchi; Emberumanars (Ramanuja's) Salaikkinaru Kainkarya (Supply of Water) to the same temple at Kanchi-all these come to our mind. Similarly, the name of Ananthalvar is inextricably associated with the temple of Thiruvengadamudaian at Thirumala by his long and devoted service.

The episodes connected with Ananthalvar's life and work at Thirumalai have already been given in the previous pages and need not be repeated here. His life-history highlights two important tenets held high by the devotees of Sri Ramanuja. They are, the devotion to Acharya as a pathway to the devotion to the Lord or Acharya Bakthi' and service unto the Lord' (Kainkarya). These two gerat qualities are exemplified by Ananthalvar. Sri Ramanuja exhorted his associates and disciples to engage them-selves in some form of physical service to the Temple. In the modern context, it can be called as a call for service to the community or social service, since the temple in those days was not only a religious centre but also a social institution. He did this not by preaching alone but by personal example, by doing water service at Kanchi every day. This inspired a host of his disciples not only in his own times but in the subsequent period also, to emulate him by doing similar kinds of services. He encouraged and even allotted certain essential but arduous works to his close disciples in important temples as a test of their forbearance and devotion. Thus, he allotted the difficult but important service of laying ,out a Flower garden at Thirumalai and supply flower garlands to the Lord Thiruvengadanatha. Thirumalai in those days was quite an inaccessible and difficult place to reach and much less to settle down. It was quite a forbidding task but which was taken up by Ananthalvar and completed successfully to the satisfaction of his Acharya, Sri Rnmanuja. He excavated a tank and reared a fine flower

acharya.org

garden from which he was supplying flowers daily to Thiruvengadamudaian. He named the lake 'RAMANUJANERI' afer his master. His devotion to his Acharya Ramanuja was justly compared to the devotiou of MADHURAKAVI Alvar to his master NAMMALVAR. Ananthalvar came to be called Madhurakavi dasa and indeed their idols are kept in one and the same shrine in the Govindarajaswami temple at Thirupathi. Like Perialvar and Thondaradipodi Alvar, Ananthalvar also is represented with flower basket (Kudali) in his hand. Another important episode is recorded in the traditional versions. Ramanuja during his visit and stay at Thirumalai saw the Ananthalvar garden and lake and was immensly pleased. It was at the instance of Ananthalvar that Ramanuja embraced his own idol and permitted Ananthalvar to instal it in the temple. The traditional account also states that the Lord ordered that the next day after 'Kanninun sirutbambu' was recited, Ramanuja-nurrandadhi should be recited in the presincts so as to be heard by Sri Ramanuja in the Archa form. So, according to the Srivaishnava tradition, Ananthalvar was very closely attached to the temple of Thiruvengadam in the same way as Thirukachinambi was in relation to Sri Varadarajaswami temple at Kanchi, He was also mainly responsible to introduce Ramanuja Cult (or worship in Archa form) at Thirumalai. Indeed, it is said that the Sri satagopam (the ceremonially mounted feet of the Lord that is placed on the heads of devotees in Sri Vashnava temples) in the shrine of Sri Ramanuja at Thirumalai is called 'Ananthalvar' after the name of his life-long disciple just as Sri Satagopam at Sriperumbudur and other places (of Sri Ramanuja) is called after Mudaliandan, another chief disciple of Sri Ramanuja. The naming was done possibly in honour of the Acharya who was responsible for the installation of Ramannja idol in the place.

Now, let us review what the inscriptions in the temple have recorded, Not many inscriptions belonging to the period of Ramanuja are available since they were lost during many renovations that were carried out in the later times. But a few references that are found scattered in the later inscriptions leave no doubt regarding the high esteem with which Ananthalvar and his descendents were held at Thirumalai and elswhere. They were considered as important Acharyapurashas and were given many priveleges in the temple. Particulary, their Thiru-nandavana-Kainkarya or garden and garland service is frequently mentioned in the inscriptions. The following are a few select references:

1. An early inscription at Thirumalai mentions the Thirunandavanam duty of Ananthalvar Venkatathurivar, the grandson of Ananthalvar one of the Acharyapurushas; (No. 233. T. T.)

......ஆசார்ய புருஷர்களில் ,
அனந்தாழ்வான்
வேங்கடத்துறைவன்
திருமலையில் திருநந்தவனத்து

acharya.org

2. Two other inscriptions from Thirumalai refers to Ananthalvar's grandson (No. 224 T. T.)

ஸரத்து மார்கழி மாசத்து
அனந்தாழ்வான் பெரனை
உகந்தருளப்பண்ணி
உடையவர்க்கு அமுது சாத்துபடி 236 T. T.)

1) at Thirumala, our
2) alias Ramanuja
3) Ramanuja Flower Garden
4) For the Channel

The latter appears to be a reference to the pledge of Ananthalvars's grandson to continue the services in the shrine of Udaiavar (Ramanujar). Another inscription in the same place refers to the pledge of Ananthalvan Venkatathuraivar to carry on the Udaiavar darsanam (or orders):

……வரையும் என் உடையவர்
தர்மம் ஆக நடத்தக் கடவேன்
அனந்தாழ்வான் வேங்கடத்துறைவர் (I. 171)

These inscriptions give remarkable confirmation of the traditional account regarding Ananthalvar's association with Ramanuja and the garden service at Thirumalai.

3. The traditional account regarding the names of the garden and the Lake founded by Ananthalvar is confirmed by inscriptions. An Inscription dated Saka 1326—AD 1404 mentions the Ramanuja-Eri (340. TT). It is also mentioned as Ramanuja Putheri in another inscription (663. TT).

4. There was also a mandapa named Ananthalvar Mandapa. Repairs and reconstruction were carried out in the Mandapa in A.D. 1493 by PERIA NARASAMMA wife of and Queen of KOMMA RAJU PERIA THIMMA RAJU WODIAR. He also made provision for offerings in the Mandapa during festival times.

அனந்தாம்பிள்ளை மண்டபம் விழுந்து போகவே கொம்மராஜ பெரிய திம்மராச உடையார் மனைவி பெரிய நரசம்மா அதைக் கட்டுவித்தார். கொடியேறி 6-ம் நாள் 7-ம் நாள் அனந்தாம்பிள்ளை

acharya.org

மண்டபத்தில் அமுதுசெய்யும் சுகியன்படி. பிரசாதம் நாழியும் அநந்தாம்பிள்ளை திரு நந்தவனம் வர்த்திக்கிற ஸ்ரீ வைஷ்ணவர் பெறக்கடவர். இப்படிக்கு ஸந்தான பரம்பரையாக நடக்கக் கடவது.

The last para would show how this flower-garden service was rendered by Ananthalvan family successively in the hereditary manner.

5. We have already referred to Ananthalvar's great admiration for Madurakavi whose acharya-bakthi served as model for his own devotion to Ramanuja. He had even the Dasya-nama as MADURAKAVI DASA. There are a few inscriptions also which allude to this association. One inscription dated 1476 AD. runs as follows:

சித்திரையில் சித்திரை மதுரகவியின் கண்ணிநுண் சிறுத்தாம்பு ராமானுஜ நந்தவனத்தில் திருப்பூமண்டபத்தில் சுகியன்படி (200 T. T)

Another inscriprion dated 1543 AD makes interesting reading.

அநந்தாம்பிள்ளை அய்யங்கார், பாரத்வாஜ கோத்ரம்......திருப்பதி ஆசார்ய புருஷர் அத்யய னோத்ஸவத்தில் கண்ணிநுண் சிறுத்தாம்பு சிறப்பு கொண்டாடும் நாளுக்கு 500 நற்பணம். திருமாமணி மண்டபத்தில் மலைகுனிய நின்ற பெருமாளும் நாச்சியாரும் எழுந்தருளி சிறுத்தாம்பு கேட்டருளி அமுது செய்ய......

திருக்கணமடை பாதி தம்மிட ஆசார்யர் அநந்தாம்பிள்ளை ஜீயர் பெறவும் (146 G. T)

Another donation by one Narayana Chetty desciple of Acharya Ananthan Pillai for the service of Kanninun Sirutambu is recorded In Govindarajaswami Temple at Tirupathi. It ends thus:

பணியாரம் வருடம் பூராவும் அநந்தம்பிள்ளை வென்று மாலையிட்ட பெருமாள் அநந்தப்பயன் பெறக்கடவர். (396 G. T.)

The title Venru-malaiyitalaperuman refers to an incident mentioned in the traditional account when Ananthalwar won over Thiruvengadamudaiyan in argument and made him accept his garland as desired by his acharya Ramanuja. Another inscription calls the Ananthalwar garden as Venru-Malaiyittar-Nandavana, (90 T. T.).

An Inscription at Govindarajaswami Temple at Tirupathi records an agreement by the Stanattars that all the 30 days in the month of Margali ¼th of the Akkali prasadam would be given to Anantalwar (47 G. T.).

An inscription on the wall of the entrance Gopura of Sri Ramanuja's (and dated A. D. 1543) shrine at Tirupathi records the grant made by one Appayyangar, son of Anantan

acharya.org

Pillai Singamayyangar, one of the acharya purushas of Tirupati. The grant was for Kanninun Siruttambu-Sirappu on the 11th day Pirpattu of Tiruvadya-yana-utsava in the month of Margali in front of Lord Tiruvengada Mudaiyan and his consorts seated on a Simhasana in the Tirumamani-Mandapa at Tirumalai and also in front of Lord Govindaraja during the same Tiruvadyayanam festival seated at Tillaikku-vaythan Mandapa at Tirupati. (146 G. T.).

6 From a few inscriptions, we learn that "sometime in A D. 1543 a member of this family was a Jiyar and he was called Anantam Pillai-Jiyar (who resided at Thriumalai and to whom certnin shares of prasadam were allotted (509 T. T.) and he was Guru of Alagia Manavala Jiyar

7. Traditional account gives the credit of introducing the recital of Ramanuja-Nutrandadi in front of Ramanuja Shrine to Ananthalvar. This seems to be alluded to in an inscription found at Thirumalai temple. It states.

அமரபக்ஷத்து தெசமியும் சநிவாரமும்
பெற்ற சித்திரை அனந்தாழ்வான்
குப்பப்பனுக்கு சிலாசாசனம் பண்ணி
ரோகிணி நக்ஷத்திரம் திருமஞ்சனம் கொண்ட
விலல்படி எம்பெருமானுர் திருவத்யயனோத்
ஸவத்தில் நூற்றந்தாதி சிறப்புக்கு படி
தண்ணீரமுது வழி

(394-A T. T.)

8. Apart from Tirumalai Tirupathi, the members of Anantampillai family branched off and settled down in various Vaishnava centres for the spread of Sri-Vaishnava Tenets. Some of them settled down in and around Kanchi in places like Kunrapakkam, Kunakkarempaklam, and Purisai. But wherever they settled down they kept alive their traditional association with their Kootasthar (preceptor) at Tirumalai. We get a few glimpses in the inscriptions about them also.

One branch settled down at a village called Kunrapakkam close to Tenneri near Kanchi where they still continue to live. An Inscription at Tirumalai (probably detable to the 16th Century) records the grant of land at Kunrapakkam for the conduct of garden service Kainkarya of Venrumalaiyittan Nandavanam at Tirumalai (90 T. T.)

It is interesting to note that the members of the family who settled down at Kunrapakkam prefix the title Tirumalai Kunnapakkam Anantampillai (TAK or T.C A.) before their personal name. and others settled down at other places as Thirumalai Ananthampillai (T. A.) This shows how the traditional link with the famous acharya,

acharya.org

Tirumalai Anantampillai was zealously preserved by the descendents of the family wherever they had settled.

Some later members of the family even migrated to other parts of South India. An interesting Copper plate inscription dated S. 1438 (= A D. 1516) from Mandya District in Karnataka refers to one Govindacharya, the 12th descendent of Ananthalvar who led the life of an ascetic. The inscription while refering to the original Ananthalvar describes him as the one who won the garland from Lord Venkatesa, This Copper plate gives the **Taniyan** of Anantarya **in extenso** (Epigraphica Carnatica Vol. III P. 24).

ஆம்நாயவாசாமபி ம்ருக்யபூமா, ஸ்ரீவேங்கட க்ஷமாதர திவ்யதாமா |
தேவோநு தாவந் ப்ரததாதியஸ்மை, ஸ்ரஜம் பஜேநந்தகுரும் தமார்யம். ||

A record at Sriperumbudur dated A.D. 1577 records a grant of a village by the Chieftain of Penukonda to a great teacher at the place, called Thirumalacharya, who was a renowned scholar and expounder of the Sri Bashya, the famous commentary of Ramanuja. This Thirumalacharya is discribed as a descendent of Ananth-Guru (Anantalvar) a direct desciple of Ramanuja (Ep. Report 1924-25 para 35) A Sanscrit work named **prapannamritam** refers to Anantalvar's association with Ramanuja. The author of this work was one Anantarya, probably a member of the family. This work gives a graphic account of the history of Sri Vaishnavism during the post-Ramanuja period. Extracts from this work have been published by the great historian Dr. S. Krishnaswami Aiyangar in his book "Sources of Vijayanagar History."

Thus, the foregoing inscriptional evidences from Tirumalai, Tirupathi, Sriperumbudur Mandya etc. afford eloquent testimoney for the distinguished services rendered to the cause of Srivaishnavism and Emperumanar darsanam by the famous Acharya "Anantalvar" and his descendents through a long period. Especially, Anantalwar's close association with Udaiyavar and Tirumalai have been immortalised by the garden services that are still being carried on by the descendents of the family. Above all, the introduction of Ramanuja worship in a shrine at Tirumalai was Anantalwar's immortal cotribution.

acharya.org

ஸ்ரீ:

எமது உளங்கனிந்த நன்றி . . .

இம் மலருக்கு முன்னுரை எழுதியளித்துச் சிறப்பித்த காஞ்சீபுரம் மஹாவித்வான் ஸ்ரீ உ. வே ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார் ஸ்வாமிக்கும்,

இம்மலர் வெளிவரத் தேவையான விஷயங்களைச் சேகரிப்பதிலும், மலர் நல்ல முறையில் அமைய ஆலோசனை கூறியும், அச்சுப்ரதிகளைச் சோதனை செய்தல் முதலிய வழிகளில் உதவியும் ஒத்துழைத்த ஸ்ரீமான்கள் 1. **ஸ்ரீ உ. வே ப்ர. நரஸிம்மாசாரியார் ஸ்வாமி** 2. **ஸ்ரீ உ. வே வி. ப்ர. நரஸிம்மாசாரியார் ஸ்வாமி** ஆகியோருக்கும்,

இம்மலரில் அடங்கியுள்ள சில ஸ்தோத்ரங்களடங்கிய சில பழைய அச்சுப்ரதிகளை அளித்துதவிய **ஸ்ரீ உ. வே. கிடாம்பி ஸ்ரீநிவாஸவரதாசாரியார் (திருப்பதி)** ஸ்வாமிக்கும்,

இம்மலரில் வெளியாகியிருக்கும் திவ்யதேச எம்பெருமான்களின் பிளாக்குகளையும் அநந்தாழ்வார் பிருந்தாவனத்தின் பிளாக்கையும், எம்பெருமானாரின் வண்ணப் படத்தையும் அன்பளிப்பாக அளித்துதவிய ஸ்ரீமான் **M.A. வேங்கட கிருஷ்ணன்** அவர்கட்கும்,

அருளாளப் பெருமாளெம்பெருமானார், அநந்தாழ்வாருக்கு திருமலையில் மரியாதை ஸாதித்தல் ஆகிய பிளாக்குகளை அளித்துதவிய ஸ்ரீமான் **K. V. ஸ்ரீநிவாசன்** அவர்கட்கும்,

இம்மலருக்காக ப்ரத்யேகமாக கல்வெட்டுகளை ஆதாரமாகக் கொண்டு ஸ்ரீ அநந்தாழ்வாரைப் பற்றியும், அவரது வமிசத்தவர்களைப் பற்றியும் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியளித்த ஸ்ரீமான் **Dr. K. V. ராமன்** அவர்களுக்கும்,

இம்மலருக்காக குணக்கரம்பாக்கம், குன்றப்பாக்கம், காஞ்சீபுரம், புரிசை ஆகிய இடங்களில் எழுந்தருளியுள்ள அநந்தாழ்வாரின் திருவுருவப்படங்களை எடுத்தளித்துதவிய ஸ்ரீமான் **P. S. வேணுகோபாலன** அவர்கட்கும்,

இச்சிறப்புமலர் வெளிவர மிகவன்புடன் நன்கொடையளித்துதவிய யாவருக்கும்,

இம்மலரை நல்ல முறையில் குறைந்த செலவில் பகவத் கைங்கர்யமாக நினைத்து அச்சடித்து உருவாக்கித்தந்த குரு அச்சகம் திரு. கிருஷ்ணன் அவர்கட்கும், அச்சகத்தார்க்கும்,

இச்சபையினரின் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பல பெரியோர்கள் ஸ்ரீ அநந்தாழ்வார் விஷயமாக எழுதியுள்ளவைகளிலிருந்து அவருடைய வைபவத்தைக் கூடிய வரையில் சிறப்பாக வெளியிட முயன்று இந்த சிறு மலரை தொடுத்துள்ளோம். இதைக் காணும் பெரியோர்கள் குற்றங் குறைகள் ஏதாகிலும் காணில் எங்களுக்குத் தெரிவித்தால் மிக்க நன்றியுடன் அவைகளை ஏற்று எங்களுடைய அடுத்த பதிப்பில் சேர்க்கச் சித்தமாக இருக்கிறோம்.

இங்ஙனம்,

சபையினர்.

Oct. 1978.

இம்மலர் கிடைக்குமிடம் :

T. A. ராஜகோபாலன்,

19, தெள்ளிய சிங்கப்பெருமாள் கோயில் தெரு,

திருவல்லிக்கேணி: சென்னை—5.

acharya.org